...லை : 20.00
...கள் : இருபது

# வலம்புரி
Valampurii

Registered as a Newspaper in Srilanka

...site : www.valampurii.lk
...ail: valampurii@yahoo.com



ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து



... 14 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 17 செவ்வாய்க்கிழமை (01.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 013





# அடேல் பாலசிங்கம் யுத்தக் குற்றவாளி

## பாதுகாப்பு அமைச்சு குற்றச்சாட்டு

(கொழும்பு), தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் தத்துவாசிரியர் அமரர் அன்ரன் பாலசிங்கத்தின் பாரியார் அடேல் பாலசிங்கம் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. அடேல் பாலசிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் எனவும், பெண் புலிகளுக்கான தலைமைப் பொறுப்பாளராக கடமையாற்றியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அடேல் பாலசிங்கம் 10வயது சிறுமிகளுக்கு பயிற்சிகளை வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சிறுவர் போராளிகளின் கழுத்தில் அடேல் பாலசிங்கம் சயனைட் வில்லைகளை மாட்டிவிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சிக்கினால் சயனைட் வில்லைகளை அருந்தி உயிரை மாய்த்துக் கொள்ளுமாறும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மேல்நாட்டு பெண் மற்றும் தாதியொருவர் இவ்வாறு கொடூரமான செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான இளம் சிறுமிகள் உயிரிழக்க காரணமான யுத்தப் பயிற்சிகளை வழங்கிய அடேல் பாலசிங்கம் பிரித்தானியாவின் சர்ரே பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றார்.

மனிதாபிமானத்திற்கு எதிரான யுத்தக் குற்றச் செயலில் ஈடுபட்ட பெண் ஒருவர் மிகவும் சுதந்திரமாக வாழ்ந்து வருகின்றார்.



அடேல் பாலசிங்கத்திற்கு எதிராக பிரித்தானியா எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளை தடை செய்யப்பட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

## ...கலை சூழலிலிருந்து ...பொலிஸார் விலகல்

(யாழ்ப்பாணம்)

...ழ்.பல்கலைக்கழக சுற்றாடலில் கடமை ... வந்த பொலிஸார் திடீரென நேற்று ...னம் அவ்விடத்திலிருந்து விலக்கப்பட்...னர்.

...கலைக்கழகத்தை மீள ஆரம்பிப்பது ...டாக நிர்வாகத்தின் அழுத்தம் காரண ...லைப்பீட மாணவர்கள் கூடுவதனை ...தே இந்த (19ஆம் பக்கம் பார்க்க)

## ...த உரிமை குழுவில் ...சிரியர்கள் முறையீடு

(யாழ்ப்பாணம்)

...ளி மாவட்டங்களுக்கு ஒப்பந்த அடிப் ...ல் சென்று கடமையை முடித்தும் தற் ... ஒப்பந்த அடிப்படையிலான இரண்டு ...கால எல்லை முடிபுற்றும் இடமாற்றம் ...கப்பெறாமல் தமது சொந்த வலயங் ...கு திரும்ப முடியாதுள்ள ஆசிரியர்கள் ...னித உரிமை ஆணைக்குழுவில் முறை ...ளனர். (19ஆம் பக்கம் பார்க்க)

## ...ணாநிதிக்கு எதிராக ...கண்டனத் தீர்மானம்

...லங்கைத் தமிழர் அழிவுக்கு காரண ...இருந்துகபட நாடகம் ஆடியதாக தி.மு.க ...வர் கருணாநிதிக்கு அ.தி.மு.க செயற் ...வில் நேற்று கடும் கண்டனம் தெரிவிக் ...ட்டுள்ளது.

...சென்னை வானரகத்தில் நேற்றுக் காலை ...யின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா ...லமையில் (19ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்கள் விடுதலையாகும் வரை கலைப்பீட செயற்பாடு ஆரம்பிக்காது

### நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதச் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு எனக்கூறப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்களின் விடுதலை தொடர்பில் சாதகமான முடிபு கிடைக்கும்வரை கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளினை மீள ஆரம்பிப்பது இல்லையென யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் முடிபு செய்துள்ளது. மாவீரர் தினமான கடந்த கார்த்திகை 27-ம் திகதியன்று யாழ். பல்கலையில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் அதற்கு பிந்திய நாட்களில் இடம்பெற்ற மாணவர்களின் கைதுகளினை அடுத்து ஒருமாத காலமாக பல் கலைச் செயற்பாடுகள் செயலிழந்துள்ளன. தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்கள் விடுவிக்கப்படும் (19ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கி இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

சுழிபுரத்தில் மின்சாரம் தாக்கி இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றிரவு 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.மின்னொளியில் விளையாடுவதற்காக மின்குமிழை பொருத்த முற்பட்டபோதே மின்சாரம் தாக்கியதாகத் தெரிய வந்துள்ளது.

இச்சம்பவத்தில் சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த வசந்தகுமார் தனுராஜ் (வயது 18) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் குறித்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-11)

## ...ருத்துவர் சிவசங்கர் இன்று முல்லை நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

...ாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மருத்துவர் ...வசங்கர் இன்று முல்லைத்தீவு நீதிமன் ... ஆஜர் படுத்தப்படவுள்ளதாக யாழ்.மருத் ...சங்கத் தலைவர் வைத்திய நிபுணர் எஸ். ...ன் தெரிவித்தார்.

...னினும் இவர் வவுனியா பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவுக்கு கொண்டு செல்லப்படலாம் என உறுதிபடுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் கைது செய்யப்பட்டமைக்கு ஆரம்பத்தில் வேறொரு காரணம் கூறப்பட்டது.

எனினும் தற்போது அவர் கைது செய்யப்பட்டமைக்கான (19ஆம் பக்கம் பார்க்க)





...G.C.E.(O/L) சித்தியுடனோ, அது இல்லாமலோ கூட
...தம் 50,000/= வருமானம்
UK & Australia பட்டச் சான்றிதழ்கள்
வேலைவாய்ப்பு With Work Permit
WITH OUT G.C.E. (O/L) ➤ SKILLS MALAYSIA INVITE HOSPITALITY MANAGEMENT ➤ 9MONTH INTERNSHIP TRAINING WITH ALLOWANCE PAID ➤ JOB WITH WORK PERMIT
SEGi University & Skills Malaysia INVITE பிரதிநிதி Ryan Kok உடன்
சிகரம் பணிப்பாளர் றுஷாங்கன் பங்கேற்கும்
...ர்பவற்றை வழங்கும் மலேசிய அரசாங்கத்தின் Skills Malaysia INVITE
ஹொட்டேல் பயிற்சிநெறி
UEL University of East London · City & Guilds · aets · SkillsMalaysia
விளக்கக் கருத்தரங்கு & SPOT ADMISSION
ஜன. 05, சனிக்கிழமை காலை 10மணி வவுனியா தம்பா ஹொட்டேல்
ஜன. 06, ஞாயிறு காலை 10மணி யாழ் ஞானம்ஸ் ஹொட்டேல்
...LTS Needed – No Embassy Interview ◆ யாழ்ப்பாணத்திலேயே விசா வழங்கப்படும்
...லசியாவில் ஏற்கனவே கற்கைநெறியைத் தொடரும் மாணவர்கள் மற்றும் ...வரியில் இணையவிருக்கும் மாணவர்களுடன் கலந்துரையாடலாம்
சிகரம் SIKARAM கல்வி - தொழில் வழிகாட்டி
இல. 221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60, நேரடி: 0773 616 798
மி.அ.:edusikaram@gmail.com இணையம்:www.sikaram.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013 இற்கான புதிய அனுமதிகள்

## BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

11 வது வருடத்தில்

| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
|---|---|---|
| Play Group | Montessori | Pre School |

இப்பொழுது பெற்றோர்களின் வசதி கருதி எமது சில வளாகங்கள் இடமாற்றப்பட்டுள்ளன.

கற்பித்தல் முறை:
- ★ சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
- ★ தமிழ் கட்டாய பாடம்.
- ★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
- ★ சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.
- ★ விளையாட்டுப் போட்டி. English Concert, முத்தமிழ் விழா. சித்திரக்கைவேலைக் கண்காட்சி. Graduation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்

தலைமைக் காரியாலயம் → யாழ்ப்பாணம்: 84, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் — மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (ஓட்டுமடம் சந்தி அருகாமை) | நீர்வேலி — [illegible] இராச வீதி |
| கோப்பாய் — பருத்தித்துறை வீதி கோப்பாய் சந்தி | சாவகச்சேரி — சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை |
| மானிப்பாய் 1 — 262, ஆலையடிச்சந்தி, யாழ் வீதி | அச்சுவேலி — ஆதார வைத்தியசாலை அருகாமை |
| மானிப்பாய் 2 — சங்கரப்பிள்ளை வீதி (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | சங்கானை — பிரதேச செயலகம் அருகாமை (நிகர வைரவர் கோவிலடி) |
| சுன்னாகம் — Dr. சபாரத்தினம் வீதி சுன்னாகம் | வடமராட்சி — பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி |

## சனி, ஞாயிறு மற்றும் வார நாட்களில் ஆங்கில வகுப்புகள்

- Certificate in English — இலக்கணம், பேச்சுத்திறனை வளர்ப்பதற்கு
- Diploma in English — G.C.E (O/L), (A/L) பூர்த்தி செய்தோர் ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு
- ESOL A1, A2 — Sponsor Scheme ஊடாக வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு
- IELTS — உயர் கல்வி கற்கவும், வெளி நாடு செல்ல விரும்புவோருக்கும்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்
- ★ Pre Foundation
- ★ Foundation
- ★ Level 1,2,3,4

பாடசாலை பாடத்திட்டத்திற்கமைய ஆங்கில பாடநெறிகள்

(சி/1977)

## BRITISH BUSINESS COLLEGE

British Business College — Where Students Come First

64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

Tel:021 222 5796, 077 362 7055

British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு நிலையம்.

Registered as an Education & Training Company with the Registrar of Companies - Sri Lanka. Reg. No: P 9718


வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## அறிவித்தல்

### வெளிநிலைத் தேர்வுநாடிகளின் பதிவேடுகள்

1. கலை முதற் தேர்வு
2. வணிக முதற் தேர்வு
3. கலைமாணி பகுதி - I
4. வணிகமாணி பகுதி - I
5. இசைமாணி
6. நடனமாணி
7. வியாபார முகாமைத்துவமாணி (இணையவழி)

மேற்படி வெளிவாரிக் கற்கை நெறிகளுக்கு 2010/2011 கல்வியாண்டில் வெளிநிலைத் தேர்வுநாடிகளாக பதிவு செய்தவர்கள் தங்களுக்குரிய மாணவர் பதிவேட்டினை 02.01.2013 (புதன்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: கல்வித் தகைமைச் சான்றிதழினதும் (க. பொ. த உயர்தரம்), பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தினதும், மூலப்பிரதிகளை சமர்ப்பிக்காதோர் அவற்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்
31.12.2012

(சி-1979)


## வான் விற்பனைக்கு

Hiace 251 - xxxx தொடரிலக்க முடைய வான் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு 077 3564259

(1355)

## பழைய கட்டிடம் விற்பனைக்கு

இல.30, குமாரசாமி வீதி, திருநெல்வேலியில் பழைய வீட்டு கட்டிடம் முழுமையாக விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0773614630, 0773173584

(1353)

## வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:

T.P : 021 321 0815, 021 567 1540
E-mail : valampurijaffna@gmail.com

## வாகனம் விற்பனைக்கு

மகேந்திரா மக்சி மோர் படி விற்பனைக்கு.
விலை விசாரணை நேரில்.
077 7066487
யாழ்ப்பாணம்.

## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம். கே.கே.எஸ்.றோட், இணுவில். (இரு இடத்திலும்)

# A/L-2015

## கலை, வர்த்தகப் பிரிவு

ஜனவரி 6ல்

எமது வழமையான ஆசிரிய குழுவினரால்

*Note:-* 5ம் திகதி அட்டமி நாள் ஆகையால் இத்திகதிக்கு முன்னர் உங்கள் அனுமதிகளை முன்கூட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

-நேர அட்டவணையும், அனுமதியும் தினமும்-
யாழ்.நகரில்:- 8.00 A.M – 4.00 P.M
இணுவில்:- 9.00 A.M – 11.00 A.M
3.00 P.M – 5.00 P.M
பெற்றுக் கொள்ளவும்.

(சி-1973)

## வாழ்த்துக்கள்

மேற்தரக் கிளை
ஸ்ரான்லி வீதி - இலங்கை வங்கி

வாடிக்கையாளரை இன்முகம் காட்டி அன்பாக பேசி ஏற்ற அறிவுரை கூறி சேவையாற்றும் திரு. பிறேமராஜன் முகாமையாளர் இலங்கை வங்கி அவர்களுக்கும் 2ஆம் கிளை அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது புதுவருட நல்வாழ்த்துக்கள்.

மற்றும் திருநெல்வேலி இலங்கை வங்கிகிளை முகாமையாளர் திரு.சந்திரகுமார் அவர்களுக்கும் வங்கி அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது புதுவருட நல் வாழ்த்துக்கள்.

இ.ஸ்ரீதரன் வேணுகா கொமினிகேசன்
964, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

(சி-1980)

## பிள்ளையார் இன்

40% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 40 % விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-
பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-

தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(சி-1976)

## O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான

- Diploma in Microsoft Office 2010
- Diploma in Information Technology
- Diploma in Hardware & Networking
- Dip. in Pre-Press Desktop Publishing
- Dip. in Video Production & Multimedia
- Dip.in Web Designing & Development
- Diploma in Computerized Accounting

DMI COMPUTER EDUCATION

அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்கள்

முதலில் பதிவு செய்யும் 200 மாணவர்களுக்கு Internet E-mail or Hardware Technology Course முற்றிலும் இலவசம்!

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Batch ii – 2/1/2013
Batch iii – 5/1/2013
Batch iv – 7/1/2013
Time - 9.30 a.m & 3.30 p.m



Join with us & get Gift

கற்கைநெறிகளுக்கு முதலில் இணைவதன் மூலம் உங்களுக்கான இலவச 8GB Pen Drive வெல்லுங்கள்

veta — Experts in English Training
ஆசியாவிலேயே முதன்மைநிலை வகிக்கும் வீட்டாவிடம் இருந்து O/L பரீட்சை எழுதியமாணவர்களுக்கான விசேட 3 மாதகால முழுமையான ஆங்கில பயிற்சி

# DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113. கன்னாதிட்டி வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி, (HNB அருகில்) Tel. : 021-227 0775 | கே. கே. எஸ். வீதி, JET ஹோட்டேல் கட்டிடம், (NSB அருகில்) Tel. : 021-224 1970 |

RRSC Motor Engineers

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

2013



Bajaj மோட்டார் சைக்கிள் ஆட்டோ வாகனங்களுக்குரிய இலவச சேவையினையும் உத்தரவாத சேவையினையும் வழங்கும்

BAJAJ



டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் உதிரிப்பாக விற்பனையாளரும் சேவை முகவரும்

ரஞ்சித் மோட்டோர்ஸ்
ரஞ்சித் ரிப்பயரிங் & சேவிஸ் சென்றர்
286 யாழ்.வீதி, மானிப்பாய்.

Ranjit Mortors Ranjit Repairing &Service Center
T.P: 0773107549, 0772269883,
Service Station: 021 373 7808 Spare Parts: 021 2255228

(சி-1984)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## கருத்துத் திணிப்பு

ஒரு தந்தைக்கு இரு பிள்ளைகள் இருந்தனர். மூத்த பிள்ளை மிகவும் அடக்கமானவன். தந்தை எது கூறினாலும் கேட்பான். பெரியவர்களுக்கு கீழ்படிந்து நடப்பான். இளைய பிள்ளை அப்படி இல்லை. தான் நினைப்பதைத்தான் சொல்லுவான்; செய்வான்.

மற்றவர் சொல்வதைக் கேட்கமாட்டான். அடங்கி நடக்க மாட்டான்.

இந்த இரண்டு பிள்ளைகளில் யாரை உங்களுக்குப் பிடிக்கும் என்று கேட்டால், மூத்தபிள்ளைதான் சிறந்தவன் என்று சொல்வீர்கள்; ஏனென்றால் அவன்தான் சொல் பேச்சுக் கேட்கிறவன் என்று கூறுவீர்கள்.

ஆனால், ஓஷோ என்ன சொல்கிறார் தெரியுமா? ஒரு குழந்தை அதன் அறிவுக்காக மதிக்கப்பட வேண்டுமே தவிர, அதன் கீழ்படியும் தன்மைக்கு அல்ல.

நாம் குழந்தைகளை சுயமாக சிந்திப்பதற்கு விடுவதில்லை.

புகழ்பெற்ற மனிதர்கள் சிலருடைய பேரை சுட்டிக் காட்டி, நீ அவர் மாதிரி வர வேண்டும், இவர் மாதிரி ஆக வேண்டும் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறோம்.

குழந்தைகள் தங்களுடைய தனித்தன்மையை வளர்த்துக் கொள்வதற்கு நாம் தடையாக இருக்கிறோம்.

ஒரு குழந்தையிடம் அநாவசியமான நம்பிக்கையை வளர்க்கக்கூடாது. எந்தவிதமான கோட்பாட்டையும் திணிக்கக்கூடாது.

உங்கள் குழந்தை நீங்கள் காட்டும் வழியிலேதான் வர வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதற்கு உங்களுக்கு என்ன உரிமை உள்ளது?

ஒரு குழந்தை சுயமாக சிந்தித்து ஒரு முடிவுக்கு வரட்டுமே... அதற்கு நீங்கள் ஏன் தடையாக இருக்கிறீர்கள்?

நமக்கு உண்மையிலேயே குழந்தை மீது அன்பு இருந்தால்... இது மாதிரியான திணிப்பு வேலைகளைச் செய்ய மாட்டோம்.

திணிக்கும் வேலையில் இருந்து குழந்தைகளைக் காப்பாற்றினால் போதும். அடுத்த தலைமுறை அற்புதமான தலைமுறையாக உருவாகும்.

நாம் தான் சாதி, மத சங்கடங்களிலே மாட்டிக்கொண்டு தவிக்கிறோம்.

அவர்களாவது சாதி, மத வேறுபாடில்லாத சமுதாயத்தைப் பார்க்கட்டும். அந்த சௌகரியங்களை அனுபவிக்கட்டுமே.

ஒரு குழந்தையிடம் நாம் கருத்துத் திணிக்கும் போது என்ன நடக்கும் தெரியுமா? அது... அவனை... அவனிடமிருந்து பிரித்து வைக்கிறது.

அவனுடைய தனித்தன்மையை அழித்து விடுகிறது. அவனை ஒரு எல்லைக்குள்ளே திணித்து விடுகிறது.

இவையெல்லாம் "அன்பு" என்ற பெயராலே பெற்றோர்கள் செய்யும் பிழையாகும்.

இவற்றையெல்லாம் கேட்டு விட்டு இந்தக் காலத்து அப்பா ஒருவர் சொன்னார்.

"நான் கருத்துக்களையெல்லாம் என் பையனிடம் திணிப்பதில்லை. ஆனால், அதிகமாக உணவு உட்கொள்ளுமாறு கட்டாயப்படுத்துவேன்" என்றார்.

"உங்கள் வீட்டு சமையல் அவ்வளவு நன்றாக இருக்குமா?" என்றேன்.

"நன்றாக இருந்தால் நான் ஏன் அவனை சாப்பிச் சொல்லி கட்டாயப்படுத்தப் போகிறேன்" என்றார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# கலைஞர்களை ஊக்கப்படுத்தி கலை மரபை வளர்க்க வேண்டும்

## யாழ்.மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

(மல்லாகம்)

எம்முடைய கலைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையிலான நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் எம்மிடையே குறைவாகவே காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் இலைமறை காயாக பல கலைஞர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இவர்களை ஊக்கப்படுத்துவதன் ஊடாகவே எமது பிரதேச கலை மரபுகளினை வளர்ச்சியடையச் செய்ய முடியும். இவர்கள் தங்களுடைய பல்வேறு முயற்சிகளின் ஊடாக பல்வேறு விதமான செயற்பாடுகளினை எமது கலை மரபு சார்ந்து ஆற்றி வருகின்றார்கள் என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் கலாசாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணத்தைச் சேர்ந்த நாடகத் தயாரிப்பாளர்கள் மற்றும் நெறியாளர்களுக்கு நடத்தப்பட்ட ஒருநாள் நாடக செயலமர்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது வாழ்வினை நெறிப்படுத்துவனவாக கலைகள் விளங்குகின்றன. கலையானது காலத்திற்கு காலம் ஏற்படும் மாற்றங்களை உள்வாங்கி வெளிப்படுத்தும் வடிவமாக விளங்குகின்றது. காலத்திற்கு காலம் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப கலை வடிவங்களும் மாற்றமுறுகின்றன.

மனிதனால் உருவாக்கப்பட்ட யுத்தம், போர் அனர்த்தங்கள் போன்றவற்றில் இருந்து மனதளவில் விடுபட நாடகக் கலை வடிவம் உதவுகின்றது.

நாடகங்களானவை போரின் தாக்கத்திலான மன உணர்வுகளை வெளிப்படுத்துவனவாகவும் சமாதான சூழலினை வெளிப்படுத்துவனவாகவும் சமூகச் சீரழிவினை வெளிப்படுத்துவனவாகவும் விளங்குகின்றன. இதனடிப்படையில் நாடகச் செயற்பாட்டில் ஈடுபடுவோரும் மூன்று பிரிவினராக தம்முடைய பங்களிப்பினை ஆற்றி வருகின்றார்கள். தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக சினிமா தொடர் நாடகங்களின் ஆதிக்கம் காரணமாகவும் யாழ்.மாவட்ட கலைஞர்கள் தயாரிக்கின்ற நாடகங்களை பார்க்கும் தன்மையில் ஆர்வம் குறைவடைந்து வருவதினை அவதானிக்க முடிகின்றது.

சிங்கள மொழி மூலமான நாடகச் செயற்பாடுகள் சினிமா போன்றவற்றோடு ஒப்பிடுகின்ற போது தமிழ் மொழி மூலமான வளர்ச்சி குறைவாகவே காணப்படுகின்றது. இவ்வாறான நாடக செயலமர்வுகள் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் தொரடப்பட்டு நாடகச் செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். யாழ்ப்பாணத்து பண்பாடு கலாசாரத்தினை பிரதிபலிக்கும் வகையில் நாடக செயற்பாட்டிற்கு எமது கலைஞர்கள் பங்களிப்புசெய்யவேண்டும்.

இதனூடாகவே எமது கலை மரபுகளினை வளர்ச்சியுறச் செய்ய முடியும் என்றார்.

இந்நாடகச் செயலமர்விற்கு வளவாளர்களாக அரச நாடகக் குழுத்தலைவர் என்.சியந்த மெண்டிஸ், அரச நாடக சினிமா தயாரிப்பாளர் ஜெயந்த, அரச நாடக சினிமா ஒப்பனையாளர் வசந்த விக்டர், நாடக இயக்குநர் டெய்சி ஜெயசிங்க ஆகியோர் கலந்து கொண்டதுடன் 70 பேர் வரையான நாடக தயாரிப்பாளர்கள், நெறியாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-9-21)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 250 | 160 | 120 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 300 | 200 |
| தக்காளி | 100 | 100 | 140 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30-35 | 30 | 40 | 40 |
| கோவா | 60 | 60 | 80 | 80 |
| கரட் | 100 | 80 | 130 | 100 |
| பூசணி | 30-40 | 30 | 60 | 50 |
| புடோல் | 40-50 | 60 | 80 | 70 |
| வாழைக்காய் | 60-70 | 50 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 130 | 160 | 180 | 160 |
| பெரிய வெங்காயம் | 95 | 100 | 120 | 110 |
| பாகற்காய் | 100 | 160 | 140 | 160 |
| வெண்டிக்காய் | 70 | 50 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 50-55 | 60 | 80 | 70 |
| பயற்றங்காய் | 130 | 190 | 120 | 120 |
| லீக்ஸ் | 100 | 110 | 120 | 140 |
| பீற்றூட் | 80 | 60 | 160 | 120 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 200 |
| இராசவள்ளி | 120 | 150 | 170 | 160 |
| போஞ்சி | 100 | 80 | 110 | 100 |
| கத்தரிதம்புள்ள | 110 | 180 | 130 | -- |
| கீரை - 1 பிடி | 5-6 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 50 | 90 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20-45 | 40 | 40 | 35-40 |
| முருங்கைக்காய் | 600 | 600 | -- | 500 |
| வெங்காயப்பூ | -- | 250 | 70 | 80 |

# இராசி பலன்

01.01.2013
(மார்கழி 17, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
சதுர்த்தி முன்னிரவு 8.27 மணிவரை
ஆயிலியம் முற்பகல் 10.51 மணிவரை
இராகுகாலம் 3.30-5.00 மணிவரை
சுபநேரம் 11.00-12.30 மணிவரை
சங்கர சதுர்த்தி விரதம்.

**மேடம்** பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சி வெற்றி தரும், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முன்வருவீர்கள்.

**இடபம்** தாய்வழி உறவில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும், பிரயாண நன்மையுண்டு.

**மிதுனம்** வருமானம் திருப்தி தரும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுப் பணிகளில் ஈடுபாடு காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்** காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்திகள் வந்து சேரலாம், உங்களின் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிங்கம்** இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவ்னம் தேவை.

**கன்னி** அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், தொழிலில் சில பணியாளர்களை மாற்றும் சிந்தனை உருவாகும், சயன சுகக் குறைவுண்டு, கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும்.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும், வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கூடும் நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர், தேக நலன் சீராகும்.

**தனுசு** தொழில் நலன் கருதி முக்கிய நபர்களைச் சந்திப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும், வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, எந்தக் காரியத்தையும் பலமுறை யோசித்து செய்வது நல்லது, போசன சுகமுண்டு.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், உறவினர் வருகையுண்டு.

**மீனம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் முன்னேற்றமுண்டு, நல்லவர்கள் தொடர்பு அதிகரிக்கும், தன்னம்பிக்கையுடன் பணியாற்றுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்திக்குத்து சந்தேக நபருக்கு 14 நாட்கள் விளக்கமறியல்

பாசையூரில் குழு மோதலின்போது இளைஞரொருவரை கத்தியால் குத்தி கொலை செய்தார் என்ற சந்தேகத்தில் கைதான 15 வயதுடைய சிறுவனுக்கு யாழ்.நீதிமன்றம் 14 நாள் விளக்கமறியல் விதித்துள்ளது.

கடந்த சனிக்கிழமையன்று பாசையூரில் உள்ள தேவாலயம் ஒன்றின் ஒளிவிழா நிகழ்வின்போது ஏற்பட்ட குழு மோதலின் போது அதே இடத்தைச் சேர்ந்த அல்பிரட் பிரிஸ் (வயது 23) என்ற இளைஞர் கத்திக்குத்துக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இக்கொலைச்சம்பவம்நடைபெற்றமறுதினமே பாசையூரைச் சேர்ந்த 15 வயதுடைய இளைஞரொருவர் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார். இக் கொலைக் குற்றஞ்சாட்டப்பட்ட 15 வயதுடைய குறித்த சிறுவன் நேற்றைய தினம் யாழ். நீதவான் பெ.சிவகுமார் முன்னிலையில் யாழ். பொலிஸாரினால் ஆஜர்ப்படுத்தப்பட்டிருந்தார். வழக்கை விசாரணை செய்த யாழ். நீதவான் குறித்த சிறுவனை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் குறித்த குழு மோதலில் 5 இற்கும் மேற்பட்டோர் ஈடுபட்ட போதிலும் தற்போது உயிரிழந்த இளைஞரினை கத்தியால் குத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் மட்டுமே ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாரினால் ஏனையவர்கள் நேற்று வரை கைது செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-4)




# பருத்தித்துறை மற்றும் அச்சுவேலி சங்கங்களிடையே அடிக்கடி முறுகல்

## நிரந்தர தீர்வை ஏற்படுத்தக் கோரிக்கை

(கரவெட்டி)

அச்சுவேலி பிரதேசத்திற்கான 750 இலக்க வீதியில் அச்சுவேலி பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டு வருவதுடன் ரோந்துப் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

பருத்தித்துறை தனியார் பேருந்து சில தரப்பினருக்கும் அச்சுவேலி தனியார் பேருந்து சில தரப்பினருக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்தே பொலிஸாரால் பாதுகாப்புப் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நீர்வேலி அத்தியார் கல்லூரிக்கு முன்பாக உள்ள வீதியில் இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட போட்டி, பகை காரணமாக இம் மோதல் சம்பவம் ஆரம்பித்தது.

இதனையடுத்து பருத்தித்துறை தனியார் பேருந்து தரப்பினரால் அச்சுவேலி தனியார் பேருந்து தரப்பைச் சேர்ந்த ஒருவர் தாக்கப்பட்டதை அடுத்து அதற்கு பழிவாங்கும் நோக்கத்துடன் வல்லைச் சந்திக்கு அண்மித்த பகுதியில் வைத்து பருத்தித்துறை தனியார் பேருந்து சாரதி ஒருவர் பேருந்தில் வைத்து தாக்கப்பட்டார்.

இதனால் பருத்தித்துறையில் இருந்து சென்ற நான்கு தனியார் பேருந்துகள் அச்சம் காரணமாக அச்சுவேலியைத் தாண்டிச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற அச்சுவேலிப் பொலிஸார் நான்கு பேருந்துகளுக்கும் பாதுகாப்பு வழங்கி யாழ்ப்பாணம் செல்ல வழி வகுத்தனர்.

அத்துடன் அன்றைய தினம் பாதுகாப்பு பணிகளையும் மேற்கொண்டனர். மறுநாளான நேற்று திங்கட்கிழமை புத்தூர் பகுதியில் வைத்து பருத்தித்துறை பேருந்துகளை பயணிக்காதவாறு அச்சுவேலி தரப்பினரால் மேற்கொண்ட முயற்சி பொலிஸாரால் முறியடிக்கப்பட்டது.

இதனால் பொலிஸ் தரப்பு மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாதவாறு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரு தரப்பினருக்கிடையில் இரு நாட்கள் ஏற்பட்ட முறுகல் நிலையினால் பேருந்தில் பயணித்த மக்கள் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

இரு தரப்பிற்கு இடையே அடிக்கடி ஏற்பட்ட முறுகல் நிலையினால் சில மாதங்களுக்கு முன்னர் தொண்டைமானாற்றுப் பகுதியில் வைத்து பேருந்து ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது.

இதனால் இச்சம்பவத்தை உரிய தரப்பினர் உரிய தீர்வு எடுக்கத்தவறினால் சில நாட்களுக்குள் பாரிய அசம்பாவிதங்கள் ஏற்படும் அபாயமும் உள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இருதரப்பினரையும் சமாதானப்படுத்தி உரிய தீர்வை பெற்றுக் கொடுத்து இருதரப்பினரும் எதிர்காலத்தில் சிறந்த நல்லுறவை பேணும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-24)

# 425 மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வணிகர் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்காக கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள வறுமைக் கோட்பாட்டின் கீழ் வாழும் மற்றும் வேறுகாரணங்களால் பாடசாலையை விட்டு இடைவிலகிய 425 மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டே இக்கற்றல் உபகரணங்கள் யாழ்.வணிகர் கழகத்தினால் வழங்கப்படுகிறது. (அ)




### தனியார் போக்குவரத்து

# சேவை புறக்கணிப்பால் சோபை இழந்தது யாழ்.

(யாழ்ப்பாணம்)

யாழ். தனியார் சிற்றூர்திச் சேவை பேருந்துகளின் திடீர் பணிப்புறக்கணிப்பினால் அரச உத்தியோகத்தர்கள் உட்பட அனைவரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இன்றையதினம் புதுவருடப்பிறப்பு என்பதால் இதற்கு முன்னதாக நேற்றைய நாளில் மக்கள் பல பொருட்களை கொள்வனவு செய்வதற்கு திட்டமிட்டிருந்தனர்.

எனினும் நேற்று காலையிலிருந்து பிற்பகல் 3 மணிவரை இடம்பெற்ற தனியார் பஸ்களின் திடீர் பணிப்புறக்கணிப்பினால் இத்திட்டமிடல்கள் யாவும் தவிடு பொடியாகின

எனினும் பெரும்பாலானவர்கள் தமது புதுவருடக் கொண்டாட்டத்தின் ஏற்பாட்டில் சற்றும் தளராது இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தில் சன நெரிசலுக்கும் மத்தியில் மிதிபலகைகளிலும் ஒற்றைக்காலில் தொங்கியபடியும் பயணித்ததை அவதானிக்க முடிந்தது.

புதுவருடத்தைக் கொண்டாடுபவர்களோடு அரச உத்தியோகத்தர்களும் பெரும்பாடுபட்டு சன நெரிசலில் பயணித்தனர்.

பேருந்தில் பயணித்த அரச உத்தியோகத்தர்கள் நேற்றையதினம் தமது பணி இடங்களுக்கு நேரம் தவறியே சென்றிருந்ததாகவும் அரச திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனைவிட யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்களுக்காக காலை, மதிய உணவு கொண்டு செல்லும் உறவினர்களும் இச்சேவைப்புறக்கணிப்பினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

கே.கே.எஸ்., பருத்தித்துறை, மானிப்பாய், பலாலி போன்ற வீதிகளில் பெருமளவான பயணிகள் நீண்டநேரமாக நேற்றையதினம் பாடசாலை விடுமுறைக்காலமாகையினால் இப்பணிப்புறக்கணிப்பின் பாதிப்பிலிருந்து பாடசாலை மாணவர்கள் தப்பித்திருந்தனர்.

ஆட்களில்லாமல் வெறுமையாக ஓடித்திருந்த இ.போ.சபையின் பேருந்துகள் நேற்றையதினம் பயணிகளால் நிறைந்து காணப்பட்டன.

அரைநாள் பணிப்புறக்கணிப்பு என்றாலும் நேற்றையதினம் போக்குவரத்தின் பாதிப்பு அதிகமாகவே காணப்பட்டது. பிற்பகல் 3 மணியளவில் பணிப்புறக்கணிப்பு முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் சோபையிழந்து காணப்பட்ட யாழ். நகர் அந்திப் பொழுதில் களை கட்டத் தொடங்கியது. (அ-4)

# சிற்றூர்திகளின் சேவை இன்று வழமைக்கு திரும்பும்

### யாழ்.அரச அதிபரின் உறுதிமொழியை அடுத்து

யாழ். தனியார் சிற்றூர்திகளின் பணிப்புறக்கணிப்பு யாழ்.அரச அதிபருடனான சந்திப்பினையடுத்து கைவிடப்பட்டு உள்ளது.

நேற்று முன்தினம் பஸ் நடத்துநர் ஒருவர் தாக்கப்பட்டிருந்தார். இச்சம்பவத்தையடுத்து யாழ்.மாவட்ட சிற்றூர்திசேவைச்சங்கங்கள் அனைத்தும் காலவரையறையற்ற பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தினர் அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று மதியம் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திற்கும் யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தினருக்கும் பருத்தித்துறை சிற்றூர்திசங்கத்தினருக்குமிடையில்யாழ்மாவட்டச் செயலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பில் இரு சங்கங்களுக்குமிடையே இணக்கப்பாடுகள் சில எட்ப்பட்டதனாலும் அரச அதிபரின் உறுதியளிப்புக்களாலும் குறித்த பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டதாக யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்தார். அதன் அடிப்படையில் நேற்று அதிகாலை முதல் மேற்கொள்ளப்பட்ட பணிப்புறக்கணிப்பு நேற்று பிற்பகல் 3 மணிக்கு முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. வழமை போல இன்றையதினம் தமது சேவை இடம்பெறும் என யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம் அறிவித்துள்ளது.

மேலும் நேற்றையதினம் மேற்கொள்ளப்பட்ட பணிப்புறக்கணிப்பில் பெரும்பாலான சிற்றூர்திகள் ஈடுபட்ட போதும் சில கூட்டிணைக்கப்பெற்ற தனியார் பேருந்துகள் பணத்தினை ஈட்டும் நோக்கமாகக் கொண்டு சேவையில் ஈடுபட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (அ-4)

# கற்றல் செயற்பாடுகள் 9 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் க.பொ.த. (சா/த) பரீட்சை -2012 இற்கான விடைத்தாள் மதிப்பிடும் பணிகள் நடைபெறுவதன் காரணத்தால் புதிய ஆண்டின் முதலாம் தவணைக் கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறுமென பாடசாலை அதிபர் எஸ். சேதுராஜா அறிவித்துள்ளார்.

இதேவேளை தரம் 6 இல் அனுமதி வழங்கப்பட்ட புதிய மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி
## புத்தாண்டு சிறப்புமலர்
01.01.2013

## யாழ். ஆயரின் புத்தாண்டுச் செய்தி



2013 ஆவது புதிய ஆண்டு மலர்ந்துள்ள இவ்வேளையில் இந்த ஆண்டு உங்களுக்கு நல்ல ஆண்டாக அமையட்டும். ஆண்டவர் இயேசுவின் அன்பும் அருளும் ஆசீரும் பாதுகாப்பும் வழிநடத்தலும் இவ்வாண்டு முழுவதும் அனைவரோடும் துணை நிற்கட்டும் என்று வேண்டி முதலில் மனம் நிறைந்த அன்பின் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

உலகம் முழுவதிலும் பெருவிழாவாகக் கொண்டாடப்படும் இப்புத்தாண்டுப் பெருவிழாக்காலத்தில் இலங்கையிலும் ஐரோப்பிய நாடுகளிலும் மற்றும் உலகின் பல பாகங்களிலும் வாழும் தமிழ்மக்களாகிய உங்கள் அனைவரையும் இவ்வூடகத்தின் வழி சந்தித்து முதலில் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

நடந்து முடிந்தவை அனைத்தும் இறைவனின் சித்தப்படியே நடைபெற்றன என இப்போது ஏற்றுக்கொள்வோம். கடந்த ஆண்டில் இறைவன் ஆற்றிய அனைத்து அரும் பெரும் செயல்களுக்கும் நன்றி சொல்வோம்.

இப்புதிய ஆண்டில் உள்ளம் நிறையப் பல எண்ணங்களையும் ஏக்கங்களையும் எதிர்பார்ப்புக்களையும் நிறைத்துவைத்து அவை அனைத்தும் நிறைவேறவேண்டும் என ஏங்கி நிற்கிறோம். இறைவன் எம் உள்ளத்து எண்ணங்களையும் விருப்பங்களையும் தேவைகளையும் இவ்வாண்டில் முழுமையாக நிறைவுசெய்யவேண்டுமென ஆசிக்கிறோம். இறையாசி வேண்டுகிறோம்.

கத்தோலிக்க திருச்சபையானது 2013 ஆவது ஆண்டின் முதல் நாளை இறைவனின் அன்னையாம் தூய கன்னிமரியாளின் நாளாகப் பிரகடனப்படுத்தி அந்த அன்னையிடம் எம்மை முழுவதும் ஒப்படைத்து இந்த ஆண்டு முழுவதும் அந்த அன்னையின் பாதுகாப்பில் வாழும்படி அழைத்து நிற்கிறது.

2013ஆவது புதிய ஆண்டை நம்பிக்கையின் ஆண்டாக திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் பாப்பரசர் அறிவித்துள்ள நிலையில் இப்புதிய ஆண்டை இறையருள் தரும் நம்பிக்கையின் ஆண்டாக ஏற்றுக்கொள்வோம். இறைபக்தியிலும் மறை அறிவிலும் பிறர் சிநேகிதத்திலும் உயர்வுறும் ஆண்டாக இவ் ஆண்டை மாற்றுவோம்.

தமிழ்மக்கள் நீதியோடுகூடிய நிரந்தர தீர்வினை இவ்வாண்டிற் பெற்று சம உரிமையோடு இலங்கை நாட்டில் வாழக்கூடிய அமைதியான காலம் தோன்றச் செபிப்போம். தமிழ்மக்களுக்கு நீதியோடு கூடிய ஒரு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டுமென நாம் எழுப்பிய குரல்களும் வேண்டுதல்களும் அரசின் இந்த அசமந்தப் போக்கினால் பயனற்றுப் போய்விட்டனவோ என எம்மை ஏக்கமுறச் செய்கிறது.

அரசியற் தலைவர்கள் மனம்மாறி ஒரு நல்லதீர்வை தமிழ்மக்களுக்கு வழங்க செபிப்போம். போர்க்காலத்தின் பின்னர் ஒழுக்க நெறி கேள்விக்குரியதான ஒன்றாக இருக்கிறது. மனித வாழ்விலும் குடும்பவாழ்விலும் பெண்களுக்கெதிரான வன்முறை, சிறுவருக்கெதிரான துஷ்பிரயோகம் மற்றும் கட்டுப்பாடற்ற ஒழுக்க நெறி என்பவை காட்டுத்தீ போல் எம் மத்தியில் இன்று பரவிவருவது வேதனைக்குரியது.

மீண்டும் ஒரு தடவை மலருகின்ற 2013 ஆவது இப்புதிய ஆண்டு உங்கள் அனைவருக்கும் நல்ல ஆண்டாக அமையட்டும். உங்கள் உள்ளத்து எண்ணங்களையும் வாழ்வின் தேவைகளையும் நிறைவுசெய்கின்ற ஆண்டாக விளங்கட்டும் என வாழ்த்தி அன்பு விடைபெறுகிறோம்.

பேரருட்திரு
இ. தோமஸ்சவுந்தரநாயகம்
யாழ். ஆயர்.

## நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி



இன்று புதுவருடப்பிறப்பு. இந்த வருடம் எமக்கு நல்ல சந்தோசம் நிறைந்த சமாதான நல்வாழ்வை வழங்கி தமிழ்மக்கள் வாழ்வில் ஒரு விடியலைத்தரும் என்ற எதிர்பார்ப்புடன் மக்கள் இதனை வரவேற்று மகிழ்கின்றனர்.

இற்றைநாள் வரை பட்டதுன்பம் போய் இனிமேல் நல்ல இன்பமான மங்கள நல்வாழ்க்கையை நல்கவேண்டுமென எல்லாம் வல்ல நல்லைக்கந்தன் திருத்தாள் பணிந்து அருளாசிகள் வழங்கி வாழ்த்துகின்றோம்.

ஈழம் வாழ் மக்கள் அனைவருமே மங்களம் நிறைந்த சுபீட்சமான மகிழ்ச்சியோடிணைந்த இனிய நல்வாழ்வு வாழவேண்டுமென இறையருளை உளமாரப் பிரார்த்தித்து ஆசி நல்கி மகிழ்கின்றோம்.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
ஆதீன குருமுதல்வர், இரண்டாவது குருமஹா சந்நிதானம்.

## ஆக்ரோஷமான ஆண்டாக மலரட்டும்



இனிய புத்தாண்டை வருவ வருக என வரவேற்போம். புதிய ஆண்டில் நற்காரியங்களை செய்வதற்கு திடசங்கற்பம் பூணுவோம். விடைபெற்ற ஆண்டில் ஆண்டவன் நமக்குத் தந்த பெறுபேறுகளுக்கு நன்றி செலுத்துவோம். செய்த தவறுகளுக்கு ஆண்டவனிடம் மன்னிப்புக்கோருவோம்.

மனித வாழ்வின் மகோன்னதமான் மகிமையை உணர்ந்து அரிய பெரிய வாய்ப்புக்களை பயன்படுத்துவோம். காலம் விரைவாக பயணிக்கிறது. இனிமேலாவது நாம் எல்லோரும் இன்புற்று ஆனந்தமான மகிழ்ச்சி நிறைந்த சாந்தி, சமாதானமான நல்லுணர்வுடன் வாழ்வாங்கு வாழவேண்டுமென்று விரும்புவோம்.

இலங்கை வாழ் மக்கள் அனைவரும் சகல சௌபாக்கியத்துடன் அனைவரும் வாழ வேண்டும் என்ற இதயம் நெகிழ்ந்த மகிழ்ச்சியுடனும் ஆக்ரோஷத்துடனும் வாழ இப்புத்தாண்டு வகை செய்யவேண்டுமென்று அன்னை ஸ்ரீமுத்துமாரியை வணங்கி வாழ்த்தி எமது நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

சர்வே ஜனகா சுகினோ பவந்து
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் (JP)
இந்துமத குருபீடாதிபதி,
அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்.

## சுயமும் மகிழ்வும் தமிழினத்திற்கு வந்துசேரட்டும்



பல வண்ண வண்ணக் கனவுகளுடன் வாழ்ந்து யுத்தச் சூறாவளியின் பிடியில் அகப் பட்டு சந்தோசங்களையும் உறவுகளையும் வாழ் நிலங்களையும் இழந்து வாழ்வின் கடைசி விநாடி வரை போராடி ஜீவநாடியை காப்பாற்றி சற்று தலைநிமிர்ந்து வாழமுற்படும் வேளையில் எம்மக்களை பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பதுபோல் இயற்கை அழிவுகள், இளவயதினரை மயக்கும் போதைப்பொருள், பெண்கள், சிறுவர் கள் வாழ்வைச் சிதைக்கும் பாலியல் பலாத்காரங்கள், பெண்களைத் துரத்தும் தொலைக்காட்சித் தொடர்கள், கைதுகள், திருட்டுக்கள் போன்ற சம்பவங்களால் வரலாற்றில் ஓர் இக்கட்டான நிலையில் இன்று தமிழ்மக்கள் வாழ்கின்றார்கள்.

இவர்களது வேதனைகளும் சோதனைகளும் சொல்லொணாதவைகள். எம்மக்களின் அனைத்து துயரங்களும் நீங்கி மீண்டும் அவர்களின் சுயமும் மகிழ்வும் அவர்களிடமே வந்துசேர பிறக்கின்ற 2013 ஆங்கிலப் புத்தாண்டு வழிகோல இறைவனைப் பிரார்த்திப்போம்.

சிவஸ்ரீ. சபா வாசுதேவக்குருக்கள்
தலைவர், சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி
## புத்தாண்டு சிறப்புமலர்
01.01.2013

### பிறக்கின்ற புத்தாண்டே!

வெற்றியும் தோல்வியும்
இன்பமும் துன்பமும்
எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்
இதுதான்! காலத்தின்
அடையாளச் சின்னங்களா!
சொல்லமுடியாத துன்பங்கள்
உணர முடியாத வலிகள்
அனுபவிக்க முடியாத அவஸ்தைகள்
மறக்க முடியாத நினைவுகள்
எல்லாமே மாறிவிடட்டும்
பிறக்கின்ற புத்தாண்டிலே!

செ.பாஸ்கரன்
சண்டிலிப்பாய் வடக்கு.

### வருக புத்தாண்டே விடிவொன்றை தருக

புதியன புகுத்தி யாண்டே
புத்துயிர் பெறுவாய் வாழி
புதியதோர் பரணி பாட
வந்தெம் மனங்கள் புகுவாய்
புதிய ஆண்டென வாய்கள் பூக்க
சிரித்திடும் நிலவாய் உதிப்பாய் வாழி.
வெந்திடும் மனங்கள் ஆற
புண்பட்டு போயோய்ந்த பொழுதுகளும் போக
புதிதாய் என்ன செய்தி கொண்டெம்மை ஆற்ற
வந்தாய் திரு புத்தாண்டே இன்று?

எமில் அரு. மேரி எமில்டா
சோலைநகர்.

### சேர்ந்து வாழ்வோம்!

ஆழி சூழ் இலங்கை எம்தீவு- இங்கு
அனைவரும் ஒன்றெனக் கூறு
மேழிபிடித்திடும் தொழிலே நமக்கு
மேன்மை தரும் என்றே பாடு
பகிர்ந்துண்டு வாழ்தலே மகிமை- நாம்
பாதினில் பெறுவது பெருமை
நகமும் சதையது போன்று தினம்
நாமிங்கு வாழ்வதே சான்று
சீருற சேர்ந்திங்கு வாழ்வோம்- ஒன்றாய்
தினந்தினம் தென்றலாய சேர்வோம்
போரும் பகையதும் வேண்டாம்- இந்த
பொன்னான வாழ்க்கையே போதும்

ந.தினுாபா, ஆரம்பக் கல்வி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்
கல்லூரி.

### புது நம்பிக்கையின் ஆண்டே!

அழிவின் ஏக்கம் பிரசவித்த ஆண்டே
அழிவிலா இன்பம் ஸ்பரிசிக்க செய்வாய்
முடிவின் விளிம்பில் முகம் காட்டும் புது
ஆண்டே!
முடிவிலா இன்பம் நாம் பெறச் செய்வாய்!
நம்பிக்கையற்றவர் நடுவில் வந்து
தித்த ஆண்டே
நம்பிக்கை ஒளியை நம்மில்
நிலை பெறச் செய்வாய்!

ஆர். ஜே.பிரகலாதன், உடுவில்.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி
## புத்தாண்டு சிறப்புமலர்
01.01.2013



### இடர்கள் யாவும் அகலும்

இறைருளை நம்புங்கள். இடர்கள் யாவும் எம்மை விட்டு போய்விடும். புதிய ஆண்டை மகிழ்வுடன் வரவேற்றுக்கொள்ளுங்கள். நல்லனவே நடக்கும் என்ற நல்லெண்ணத்துடன் புதிய ஆண்டு பற்றிய எண்ணங்களை சிந்தியுங்கள். விடைபெறும் ஆண்டில் நமக்கு கிடைத்த நன்மைகளை நினைத்து திருப்தி யடையுங்கள். கடக்கும் ஆண்டு தந்த கவலைகளை மறந்துவிடுங்கள்.

எதுவும் எம் கையில் இல்லை. இறைவன் தந்த வாழ்வு என்ற உண்மையை உரக்க எடுத்து உரையுங்கள். அறம் அற்ற ஆட்சி, அதிகாரம், ஆணவம், கொடுமை என்றும் நிலை பெற்ற சரித்திரம் இல்லை. தெய்வீகத்தை நம்புங்கள். தர்மவழியில் நடப்போம் என்று உறுதி செய்யுங்கள். ஆபத்தில் தத்துவப்பேச்சால் பயனில்லை. அமைதி கொள்வோம். பிறரின் கண்ணீரையும் துடை த்து நாமும மகிழ்வாய் வாழ நல்வழிகளை நாடுவோம். புதிய ஆண்டில் செயற்கரு செய்கை செய்ய அனைவரும் எத்தணிப்போம்.

எம் இனிய மண்ணில் விடிவுண்டாகப் பிரார்த்திப்போம். கல்வியால் எம் குழந்தைகள் சாதனைகளைச் சந்திக்க வாழ்த்துவோம். சகல வளங்ளும் எம் உழைப்பால் உயர வாழ்த்துவோம். எம் இளைய தலைமுறை ஈடு இணையற்ற நல்லறிவுப் பாதையில் வல்லவர்களாக திகழவேண்டுவோம். சிறைச்சாலைகளில் அநியாயமாக துன்புறும் மக்கள், நோயினால் துவளும் மக்கள் அனைவருக்காகவும் ஒன்றுபட்டு பிரார்த்திப்போம்.

யாழ்.குடாநாடு பெற்ற நற்பெருமைகளை வளர்க்க அனைவரும் ஒன்றுபடுங்கள். பலலீற்றர் மது அருந்தும் குடாநாட்டார் என்ற குற்றம் போய் குவலயத்தின் விழிபோன்றான் யாழ்ப்பாணத்தான்.. என்ற மகுடத்தை காக்க புதிய ஆண்டில் அனைவரும் தயாராவோம்.

செஞ்சொற் செல்வர் கலாநிதி
ஆறு.திருமுருகன் தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை





சரவணா ரெக்ஸ்

219 பிரதான வீதி, சங்கானை.
(HNB வங்கிக்கு முன்பாக)
021 225 0909

இல. 171,பிரதான வீதி
சம்பத்வங்கிக்கு அருகாமை,
நெல்லியடி.
தொ.பே:- 021 226 2992

இல. 526,529, பருத்தித்துறை வீதி
நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே:-021 222 1723

இல. 770, 772, தட்டாதெருச் சந்தி,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.




### ஆளுநரின் வாழ்த்துச்செய்தி

வடமாகாண மக்களுக்கு எனது உளங் கனிந்த புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். மலரும் புத்தாண்டு உங்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் சாந்தி, சமாதானம் சுபீட்சத்தை ஏற்படுத்தவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

தற்போது நிலவும் வருடமானது முடிவுக்கு வரும் இவ்வேளையில் புதுவருடம் 2013 இற்குரிய வாழ்த்துரைகளையும் நல்லலாசிகளையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்புத்தாண்டில் சிறப்பு வாய்ந்த அனைத்தும் கிடைக்கவேண்டுமெனவும் இவற்றுடன் தங்களுக்கு மனநிறைவும் சந்தோசமும் சகல சௌபாக்கியங்களும் கிடைக்க வேண்டு மெனவும் வாழ்த்துகின்றேன்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட சமாதான. சூழ்நிலையையும் மகிந்த சிந்தனையான வடக்கின் வசந்தம்/ உத்துறு வசந் தய ஆகிய செயற்றிட்டங்களின் அடிப்படையில் வடமாகாணத்தில் ஏற்படுத்தப்பட்ட பாரிய அபிவிருத்தி திட்டங்களின் பலாபலன்களையும் இம்மாகாணத்தில் வாழும் மக்கள் அனு பவிக்கக்கூடியதாக இருக்கின்றது என்பதை வடமாகாண ஆளுநர் என்ற வகையில் நான் நினைவுகூருவதில் பெருமிதம் அடைகின்றேன்.

கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்பட்டுள்ளன. இடம்பெயர்ந்தோர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் பலர் புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளனர். சேதமுற்ற வீடுகள் புனரமைக்கப் பட்டுள்ளன.

புதிய வீடுகள் பல நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இன்னும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தருணத்தில் எமது நடவடிக்கைகளை முன்னோக்கி நகர்த்துவது காலத்தின்தேவை. மிகவும் சந்தோஷமாகவும் அதிர்ஷ்டம் நிறைந்ததாகவும் இப்புத்தாண்டு மலரட்டும் என்று வாழ்த்துகின்றேன்.

ஜி.ஏ.சந்திரசிறி ஆளுநர்,
வடமாகாணம்.












கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற A தர கனசர சாரதி பயிற்சிப் பாடசாலை)

- குறிப்பிட்ட காலப் பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழுங்கப்படும்.
- வான், முச்சக்கர வண்டி, உழவு இயந்திரம் (டெக்டர்) அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் இரண்டு வருடம் பூர்த்தியானால் கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்ப பத்திரம் பெறமுடியும்.
- கனரக வாகன (AD) சாரதி அனுமதிப் பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி பெறலாம்.
- தவணை முறைக் கட்டணம்
- எழுத, வாசிக்க, தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை

தலைமைக் காரியாலயம்:
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P :021 222 4353, 0214923200
0714546952, 0777225292

கிளைகள்

| பருத்தித்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி | விசுவமடு | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|
| T.P : 0214923201 | T.P : 0214923202 | T.P : 021 228 5505 | T.P : 021 300 6550 | T.P : 021 320 1515, | T.P : 021 224 2022, |
| 0714546958 | 0212270700 | 0714546955 | 0714546957 | 0714546955 | 0714546956 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாம் செல்லும் பயணம் வெல்லும் என்ற நம்பிக்கை வலிமை பெறட்டும்



பிறக்கின்ற புத்தாண்டின் புதுமலர்வில் நாம் செல்லும் பயணம் வெல்லும் என்ற நம்பிக்கை எமது மக்களின் மனங்கள் தோறும் மேலும் வலிமை பெற வேண்டும். அதற்காக நாம் சகல தடைகளையும் கடந்து இன்னமும் உறுதியுடன் உழைக்க எழுவோம் என்று ஈ.பி.டி.பி (ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி) யின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவா னந்தா அவர்கள் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதுவரை கால மனிதகுல வரலாறுகள் யாவும் முன்னேறிய சமுதாயங்களையே உருவாக்கித் தந்திருக்கின்றன. அதுபோலவே எமது மக்களின் சமகால வரலாற்றின் ஊடாக ஒளிமயமானதொரு எதிர்கால வரலாறு இங்கு படைக்கப்படும் என்பது உறுதி.

துயரங்களும் அவலங்களும் நிரந்தர மானவையல்ல. அவையாவும் தூரவிலகி காணவேண்டிய உரிமை விரைவில் கிடைக் கும் என்றும் காணாமல் போயிருந்து மறுபடி மலர்ந்துள்ள மகிழ்ச்சி இங்கு நீடித்து நிலவும் என்றும் எமது மக்கள் நம்பிக்கையுடன் எதிர் காலத்தை அமைத் துக் கொள்ள முன்வர வேண்டும். இன்று அமைதி தரும் ஒரு சூழ லில் பிறந்திருக்கும் புத்தாண்டை அச்சமின்றி வரவேற் கும் காலம் ஒன்று கனிந்திருக்கிறது என்ற போதிலும் இயற்கை அழிவு தரும் துய ரங்கள் எமது மக்களை வாட்டுகின்றன.

வாடிய பயிர்களைக் கண்டு நாமும் வாடி யிருக்க முடியாது. எமது மக்களின் வாட்டத் தைப்போக்கவே வரவழைக்கப்பட்டவர்கள் நாம். கடந்த கால அழிவுகளில் இருந்து மீண்டெழுந்த எமது மக்களும் தேசமும் இனி வரும் துயரங்கள் எவை யாயினும் அவற் றிலிருந்து மீள்வது மிக சுலபமானதே.

எமது மக்கள் துயர்களுக்கு மத்தியில் வாழ்வதற்கென்றே யாராலும் சபிக்கப்பட் டவர்கள் அல்லர்.

நாம் எமது இலக்கை அடை வதில் தோற்றுப்போன ஓர் இன, சமூக மக்க ளும் அல்ல. எதையும் சாதிக்கப் பிறந்த வர்களே நாம் என்பதையும் அடைய வேண் டிய அரசியலுரிமை, சுதந்திரத்தை நாம் அடைந்தே தீருவோம் என்பதையும் பிறந் திருக்கும் புத்தாண்டில் நாம் நிரூபித்துக் காட்ட வேண்டிய தருணம் இது! என அவர் குறிப் பிட்டுள்ளார்.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் உலகப்போர் என்று ஒன்று மூளுமா? மூண்டால் அது ஆயுதங்களை முன்நிறுத்தி நிகழுமா? நிகழாது என்றே கருதப்படுகிறது. நிகழ்ந்தால் அது அறிவுடமை ஆகாது என்றே தோன்றுகிறது. ஏனெனில் அப்படி நிகழும் ஓர் அகில உலக ஆயுதப் போரில் வெற்றி கொண்டவன் முதல் பலியாவான்; தோல்வி கண்டவன் இரண்டாம் பலியாவான். அதனால் 3ஆம் உலகப்போர் மூளாது என்றே அறிவுலகம் நம்புகிறது.

ஆனாலும் மனிதகுல நகர்வுக்கு போர் அவசியம் என்றே மானுடவியல் கருதுகிறது. போர்களே தேசங்களை உண்டாக்கின இனக்குழு சமுதாயங்களை இணைத்தன கலாசார உறழ்வுகளை ஆசான்கள். விலங்கு தின்ற எதையும் மனிதன் தின்றான். பழங்கள், கிழங்குகள், தானியங்கள், இலை தழைகள், விலங்கின் தசைகள் என்பன கிட்டாத போது பிணங்கள் மனிதர்களின் பெரு விருந்தாயின.

ஒரு பிணம் மட்டும் உண்ணக் கிடைத்து உண்போர் எண்ணிக்கை அதிகமானவிடத்து ஓட்டப்பந்தயத்தில் எவன் வென்றானோ அவனே பிணத்தின் பெரும் பங்கு தின்றான் என்று காட்டுகின்றன கல்லோவியங்கள். வேளாண்மை தோற்று உணவு அரிதாகுமிடத்து மீண்டும் நரமாமிசம் என்ற அநாகரிகம் மனித குலத்தை ஆட்கொள்ளலாம்; அது நிகழாது என்று மறுக்க முடியாது.

...றாண்டுகள் ஆராய்ந்தேன்; பத்து மாதங்கள் எழுதினேன். எங்கள் மண்ணில் மக்கள் ஊடாக உலகத் துயரத்தைப் பதிவு செய்தேன்.

மண்ணில் முளைத்த மனிதர்கள்- உணர்ச்சியில் ஊறிய மொழி-சத்தியத்தில் நிகழும் சம்பவங்கள்- அனுமதிக்கப்பட்ட எல்லைக் கோட்டுக்குள் நிகழும் கற்பனை-நான் நடந்து பழகிய பூகோளம்-எல்லோரும் அறிந்த. ஆனால் எழுதப்படாத எளியவர்களின் சரித்திரம், இவற்றின கூட்டுத் தொகுப்புதான் மூன்றாம் உலகப்போர்.

இந்தப் படைப்பு உள்ளூர் மனிதர்களின் நாவினால், பேசப்படும் உலகக் குரல். விழவேண்டிய செவிகளில் விழுந்தாக வேண்டும். வாசிப்பு-ரசிப்பு என்ற பத்தால், தங்கள் பவளப்பாறைகளை இழந்துவிட்டன. அதனால், மீன்கள் இடம்மாறிவிட்டன அல்லது இறந்து விட்டன.

ஆபிரிக்காவின் மாளாவி-குனியா-உகண்டா; ஆசியாவின் பங்களாதேஷ்-கம்போடியா-பாகிஸ்தான்; தென்னமெரிக்காவின் பெரு-கொலம்பியா, ஆகிய நாடுகளின் கரையோர மீன்வளம் குறைந்து கொண்டே போகிறது.

பூமி-வானம் என்ற இரு வழிகளிலும் தான், தாக்கப்படுவது அறியாத விவசாயி விளையும் என்ற நம்பிக்கைக்கும், விளையாது என்ற எதார்த்தத்திற்கும் மத்தியில் கலப்பைகட்டி உழுகிறான் அல்லது அழுகிறான். விலங்குகளைப்போல உழைக்கிறவனும் தன் விலங்குகளுக்கும் சேர்த்து உழைப்பவனும் அவனேதான்.

# மூன்றாம் உலகப்போர்

## இப்படைப்பிற்காக கவிப்பேரரசு...



கவிப்பேரரசு
வைரமுத்து

நிகழ்தின. கத்திமுனையில் நாகரிகங்களைக் கற்பித்தன; உதிரிப்பூ மனிதர்களை மாலை கட்டின. அதனால்தான் மனிதர்கள் போர்களை விரும்பாவிட்டாலும் போர்கள் மனிதர்களை விரும்பி நிகழ்ந்திருக்கின்றன.

இப்போதும் ஒருபோர் தொடங்கி நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது, தன் வடிவத்தை மாற்றிக் கொண்டு. இது முகத்துக்கு முகம்பார்த்து மோதாத போர். ஆயுதங்களை ஒளித்துக்கொண்டு நிகழ்த்தும் போர்; மண்ணுக்கும் விண்ணுக்கு



இரண்டாம் உலகப் போரில் ஸ்டாலின் கிராடில் சிறைப்பிடிக்கப்பட்ட ஒரு இலட்சம் ஜேர்மானியர்கள் சைபீரியாவின் போர்க்கைதி முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். 872 நாட்களுக்குப்பிறகு பறவைகளையும் எலிகளையும் வீட்டு விலங்குகளையும் தின்று தீர்த்ததும், சககைதிகளின் பிணங்களை நோக்கி அவரிகளின் பெரும்பசி நீண்டது. போர்முகாமில் 5000 பிணங்களைக் காணவில்லை-பின்னர் அவை எலும்புக் கூடுகளாகக் கண்டறியப்பட்டன. எனவே, பசியின் உச்சம் சக மனிதனையும் உணவாகப் பார்க்குமே தவிர உயிராகப் பார்க்காது. அந்த அச்சம் இப்போது பீடித்திருக்கிறது அறிவுலகத்தை.

கி.பி 2050 இல் 900 கோடியாய் இருக்குமாம் இந்த பூமிப்பரப்பின் மக்கட் தொகை. ஆனால், மக்கள் பெருக்கத்துக்கு எதிர்மறையாக இறங்கிக் கொண்டேயிருக்கிறது, உலக உணவு உற்பத்தி, 2000 ஆண்டில் தொடங்கி எட்

எல்லைகளைத் தாண்டி தீர்வுகளையே பரிசாகக் கேட்கிறது இந்தப் படைப்பு.

இயற்கையாலும் செயற்கையாலும் கூடிவரும் புவி வெப்பம், உலக விவசாயத்தின் மீது நிகழ்த்தியிருக்கும் தாக்குறவு அளப்பரியது; ஆராய்ச்சியில் கண்ட செய்திகள் அதிரவைக்கின்றன.

மத்திய ஆசியாவின் கிர்கிஸ்தான் நதிகள் குறைந்துவருகின்றன. சில நேரங்களில் வரண்டேவிடுகின்றன. கடந்த பத்தாண்டுகளாக மத்திய ஆசியாவின் பனிமலைகள் உருகவில்லை. அல்லது உருகுவதற்கு பனிப்பாறைகள் இல்லை. இப்போது நிலவும் 3.5 டிகிரி செல்சியஸ் வெப்பம் 2100இல் 8.4டிகிரி செல்சியஸ் ஆக உயரக் கூடும். உயர்ந்தால், வித்துக்கள் விதைக்க முடியாது, மத்திய ஆசியாவில்.

தென்னாபிரிக்காவின் செனகலில் அதிகரித்துவரும் வெப்பத்தால், திடீர் திடீரென தீப்பிடிக்கிறது. சூழும் கடும் காற்று தீயின் அழல்களை அள்ளிவந்து விளை நிலங்களில் வீச-இலட்சக்கணக்கான ஏக்கர் தானியங்கள் சாம்பலாகும் சம்பவங்கள் தொடர்கின்றன.

ரஷ்யாவின் அனுமானிக்க முடியாத வானிலையால் தடுமாறிப்போன விவசாயிகள் தங்கள் கோதுமை விவசாயத்திற்காக பருவம் மாறுகிறார்கள்; பாவம் ஏமாறுகிறார்கள்.

அமெரிக்காவின் கொலம்பியாவில் மலையேறிய வெப்பம் காலங்காலமாய் தழைத்திருந்த கோப்பித் தோட்டத்தை கருக்கிவிட்டது. மாற்றுப் பயிராக இட்ட தக்காளியும் வெந்துவிட்டது வெப்பத்தால்

இந்தப் படைப்புக்காக நான் இயங்கிய காலம் நான் விரும்பிப் பாரம் சுமந்தகாலம். உழைக்கும் மக்களுக்கான எழுத்து வேள்வி இது.

எங்கள் மக்களின் பொருளாதாரம் சிறிது; வாழ்வு பெரிது. இருத்தல் குறித்த மதிப்பாளுமை பெரிதினும் பெரிது. அவர்தம் வட்டார வழக்கில் இழையோடும் சங்கீதம் இனிதோ இனிது.

கருத்தமாயி-சிட்டம்மா தம்பதிகள் எல்லா சமூகங்களிலும் எல்லா ஊர்களிலும் இப்போதும் வாழ்கிறார்கள்.

சின்னப்பாண்டி வாழும் திரிசங்கு சொர்க்கத்தில்தான் எல்லா ஊர் இளைஞர்களும் இருக்கிறார்கள். நம் எல்லோருக்குள்ளும் முத்துமணியின் பல முகங்களுள் ஒரு முகம் இல்லாமல் இல்லை.

எமிலி-இஷிமுரா இருவரும் இந்தப்படைப்பின் அகிலத்தன்மை கருதி நான் படைத்துக்கொண்ட பாத்திரங்கள். அவர்தம் வரவு இந்தப்படைப்புக்கு மற்றும் ஒரு பரிமாணம்.

• மற்றப்படி அந்தக் கல்லும் முள்ளும் கரடும் குன்றும்- செடியும் கொடியும் மரமும் நதியும்-மகிழ்வும் துயரும் உயர்வும் இழிவும்-ஜனனம் மரணம் சம்பவம் பலவும் நான் உற்ற உணர்வு; பெற்ற வாழ்வு; கற்றகல்வி; பட்டகாயம்.

எனவே இந்தப்படைப்பில் புண்ணில் ஒழுகும் இரத்தமும் கண்ணில் வழியும் கண்ணீரும் இரவல் உணர்ச்சியல்ல-பெரிதும் என் உணர்ச்சி. மண்ணைப் பெருமை செய்யும் படைப்பு; மானுடத்திற்கான திடக்கண்ணீர்.

இப்படைப்பின் உள்ளடக்கம் பேசப்படவேண்டும் விவசாயத்தின் வீழ்ச்சி குறித்தும் ஐ.நா.வில் உலகநாடுகள் விவாதிக்க வேண்டும்.

# மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

மான போர்; மனிதனுக்கும் இயற்கைக்குமான போர்; இது மனிதகுலம் சந்தித்திராத மோசமான முகமூடிப் போர்; புவி வெப்பமாதல்- உலகமயமாதல் என்ற இரண்டு சக்திகளும் வேளாண்மைக்கு எதிராகத் தொடுத்திருக்கும் விஞ்ஞானப்போர். இந்தப் போரில் இயற்கையை எதிர்த்து மனிதன் வென்றாலும் மனிதனை எதிர்த்து இயற்கை வென்றாலும் தோற்கப்போவதென்னவோ மனிதன்தான்.

நாடோடிக் கலாச்சாரத்திலிருந்து எது மனிதனை மீட்டெடுத்ததோ-எது மனிதனுக்கு இருத்தல் நாகரிகம் கற்பித்ததோ-அது-அந்த வேளாண்மை தொடங்கிப் பத்தாயிரம் ஆண்டுகள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. வேளாண்மைக் கலாச்சாரம் வந்தபிறகுதான் உண்ணல்-உடுத்தல்-இருத்தல் என்ற உயிர்த்தேவைகள் ஒழுங்குற்றன.

விவசாயம்தான் நரமாமிசத்திலிருந்து மனிதனை நாகரிகத்திற்கு அழைத்து வந்தது. உணவுப் பழக்கத்தில் விலங்குகளே ஆதிமனிதர்களின்

டாண்டுகளில் 24 விழுக்காடு குறைந்திருக்கிறது, உலகத்தின் கோதுமை இருப்பு; 39 விழுக்காடு இறங்கியிருக்கிறது அரிசி இருப்பு.

புவி வெப்பமாதல் என்ற பூதம் தலைவழியாகவும் உலகமயமாதல் என்ற பூதம் கால்வழியாகவும் ஒரே நேரத்தில் விழுங்கிக் கொண்டே வருகின்றன விவசாயியை. எனக்குத் தெரியும் அந்த வலி. இந்திய தேசப் படத்தில் இடம்பெறாத ஒரு கிராமத்தில் பிறந்து, 17 வயது வரை கபாலம் பிளக்கும் வெய்யிலிலும் காலைச் சுடும் புழுதியிலும் கலப்பை பிடித்து உழுத எனக்கு விவசாய வெளிகளில் தண்ணீரோடு பாயும் கண்ணீரும் இரத்தமும் நன்றாகவே புரியும்.

இந்தப் படைப்பை விவசாயி மகனாக இல்லாத ஒருவன், இவனுள்ள தாக எப்படிச் செய்ய முடியும்? மூன்

அவுஸ்திரேலியா ஆயிரம் ஆண்டுகள் அறியாத வறட்சியை 2006 இல் சந்தித்தபோது பார்லியும் கோதுமையும் காய்ந்து கருகிவிட்டன. மீண்டும் பழைய உச்சத்தை பார்லி எட்டவேயில்லை.

இப்படி ஐந்து கண்டங்களிலும் கண்டத்தைச் சந்தித்து அந்திமத்தில் இருக்கிறது ஆதித் தொழிலான விவசாயம். உலகில் அதிக அரிசி ஏற்றுமதி செய்யும் வியட்நாம் நாட்டின் மக்கான் டெல்டா புவி வெப்பமாதலின் உடன் விளைவால் அடிக்கடி கடல்நீரில் மூழ்கிப்போகிறது. மழைநீரில் மூழ்கினால், 17 நாட்கள் தாக்குப்பிடிக்கும் நெற்பயிர்கள், கடல் நீரில் மூழ்கினால், உடனே அழுகிப்போகின்றன.

அதே புவிவெப்பமாதல்தான் மீன்வள நாடுகளின் கரையோரக் கண்ணீருக்கும் காரணமாகிறது. மீன்வளம் மிக்க 33 கடலோர நாடுகள் புவிவெப்

வைரமுத்து

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

327

## பிரிவு!

அக்பர் சக்கரவர்த்தியும் பீர்பாலும் நெருங்கிய நண்பர்கள். பீர்பால் வேடிக்கையாகப் பேசக்கூடியவர். விநோதமாகவும் செயற்படுவார். அரசாங்கப் பிரச்சினைகளாலும் போர்களாலும் அக்பர் அடிக்கடி சலித்துப் போய் விடுவார். அப்போது எல்லாம் பீர்பால் தமது வேடிக்கைப் பேச்சுக்களால் அக்பரின் மன இறுக்கத்தைப்போக்கி இலகுவாக்கி விடுவார். ஆகவே அக்பரும் பீர்பாலும் தினமும் உரையாடிக்கொண்டே உலாவுவதை வழக்கமாக வைத்திருந்தனர்.

பீர்பால் நீண்டகாலமாக அக்பருடன் நெருங்கிப் பழகியதால் அவரை பரிகாசம் செய்யும் அளவிற்குத் துணிச்சல் பெற்றிருந்தார். ஆனால் ஒருமுறை அவர் எல்லை மீறி ஏதோ துடுக்காகச் சொல்ல அக்பரின் சுயகௌரவம் விழித்துக்கொண்டது.

என்னைக்கேலி செய்யும் அளவிற்குப் போய்விட்ட இந்தப் பீர்பால் யார்? ஆலோசகர் என்ற பெயரில் என்னிடம் சம்பளம் வாங்கிப் பிழைப்பவர்தானே என்ற எஜமான உணர்வு தலைதூக்கியது.

பீர்பால்! உமக்குத் திமிர் அதிகரித்துவிட்டது. என் கண் முன்னே நிற்காதீர்கள்... இந்த நகரத்தை விட்டு வெளியேறுங்கள் என்று கோபமாகக் கட்டளையிட்டார் அக்பர். பீர்பால் மறுபேச்சின்றி அந்த இடத்தை விட்டு அகன்றார். நாட்கள் பல ஓடின.

பீர்பால் இல்லாமல் அக்பருக்கு வாழ்க்கை சுவையிழந்து போய்விட்டது. அரசாங்கப் பிரச்சினைகளையும் குடும்பக் கவலைகளையும் பற்றி அவர் பீர்பாலிடம் மனம்விட்டுப் பேசியது போல் வேறு யாரிடமும் சுதந்திரமாகப் பேசமுடியவில்லை. அக்பர் தன்னிடம் சொன்ன எந்த இரகசியத்தையும் யாரிடமும் வெளியிடமாட்டார் பீர்பால். நகைச்சுவையாகப் பேசினாலும் அவரது ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

வயதில் பெரியவராதலால் அவர் வேடிக்கையாகப் பேசியதற்குக் கோபித்திருக்கக்கூடாது என்று அக்பருக்குத் தோன்றியது. பிரிவுத் துன்பம் எல்லை மீறியது. அக்பர் வீரர்களை அனுப்பி எல்லாத்திசைகளிலும் பீர்பாலைத்தேடச் சொன்னார். வீரர்கள் பக்கத்திலுள்ள ஊர்களுக்கெல்லாம் சென்று தேடினர். ஆனால் உள்ளே இருந்தவரை வெளியே தேடினால் எப்படிக்கிடைப்பார்? ஆம்! பீர்பால் தலைநகரான ஆக்ராவில்தான் ஒளிந்திருந்தார். சந்து பொந்துகள் நிறைந்த கினாரி பஜார் பகுதியில் புரோகிதர் வேடத்தில் இருந்தார்.

தேடுவதற்கு அனுப்பப்பட்ட வீரர்கள் வெறுங்கையுடன் அக்பரிடம் திரும்பினர். பீர்பால் சாஹிப் இருக்கக்கூடிய இடங்களிலும் தேடிப்பார்த்தோம். அவர் இருக்கமாட்டார் என்று நினைத்த இடங்களையும் விட்டுவிடாமல் அங்கெல்லாமும் தேடினோம். மந்திரவாதிகளிடம் வெற்றிலையில் மை தடவி மந்திர திருஷ்டியால் அவர் இருக்குமிடம் கண்டுபிடிக்கச் சொன்னோம். அதுவும் பலன் தரவில்லை என்று வருத்தத்துடன் தெரிவித்தனர்.

அக்பர் அவர்களை அனுப்பி விட்டு யோசனையில் ஆழ்ந்தார். காணாமல் போனவர்களைத் தேடிக்கண்டு பிடிக்க இப்போது உள்ளதைப்போல் செய்தித்தாள், தொலைக்காட்சி ஆகிய வசதிகள் அக்பர் காலத்தில் இருக்கவில்லை. பக்கத்து ஊர்களில் பீர்பால் இல்லை என்பது வீரர்கள் கொண்டு வந்த தகவலால் தெளிவாகி விட்டது. அவையெல்லாம் சிறு ஊர்கள், புதிதாக யாராவது வந்தால் தெரிந்து போய்விடும். ஆகவே பீர்பால் மாநகரான ஆக்ராவில்தான் எங்கேயோ ஒளிந்து வாழ்ந்துகொண்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு அக்பர் வந்தார்.

ஒளிந்திருக்கும் மிருகங்களை வெளியே கிளப்ப ஒலி எழுப்புவதைப்போல் மறைவிடத்திலிருந்து பீர்பாலைக் கிளப்ப வைக்க அக்பர் ஆட்களைக் கொண்டு தெருத்தெருவாக தண்டோரா போட்டு ஓர் அறிவிப்புச் செய்வித்தார். அது ஒரு புதிரான அறிவிப்பு.

புதிர்களை விடுவிப்பது பீர்பாலுக்கு பிடித்தமான விடயம் என்று அக்பருக்குத் தெரியும். ஆகவே தன் அறிவிப்பு பீர்பாலுக்கு எட்டினால் அதற்கான பதிலை பீர்பால் அனுப்புவார். அதன் மூலம் அவர் மறைந்துள்ள இடம் தெரிந்து விடும் என கருதினார் அக்பர்.

டம்டம் டப்பர டம்! டம் டம் டப்பர டம்!



எவன் ஒருவன் பாதி வெயிலும் பாதி நிழலுமாக அரண்மனைக்கு வந்து சக்கரவர்த்தி அவர்களைச் சந்திக்கிறானோ அவனுக்கு கஜானாவிலிருந்து நூறு தங்கக் காசு பரிசாக அளிக்கப்படும்.

டப்பர டப்பர டம்டம்! டப்பர டப்பர டம்டம்!

தண்டோரா அறிவிப்பைக் கேட்ட அனைவரும் தங்கக் காசுகளுக்கு ஆசைப்பட்டனர். ஆனால் அப்படி ஒருவராலும் பாதி நிழலும் பாதி வெயிலுமாக அரண்மனைக்குப் போக முடியும்? ஒருத்தருக்கும் இந்தப் புதிர் விளங்கவில்லை.

ஒருத்தன் குடுகுடுப்பைக்காரன் சொன்னதைக் கேட்டு உடலில் ஒரு பாதி வெள்ளை பெயின்ட்டும் பூசிக் கொண்டு அக்பரிடம் போய் பரிசு கேட்டான்.

அக்பர் சக்கரவர்த்தி வயிறு குலுங்கச் சிரித்து விட்டு அந்த சாயங்களின் விலையை அவனுக்குக் கொடுத்து விரட்டிவிடச் சொன்னார்.

இன்னொருவன் எரியும் தீப்பந்தத்தை இடுப்புக்கு மேல் நோக்கிப் பிடித்துக் கொண்டான். இந்த கீழ்ப்புறம் கறுப்பாக இருந்தது. அவன் அக்பரிடம் வந்து சன்மானம் கேட்டான். நான் எதிர்பார்ப்பது நிஜ வெயில் நிஜ நிழல் என்று கூறி அக்பர் அவனுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்து அனுப்பி விட்டார்.

இம் மாதிரியான கோமாளித்தனமான முயற்சிகள் பற்றிய செய்தி ஊரெங்கும் பரவியது. இது பீர்பாலையும் வந்தடைந்தது. அவர் அக்பர் போட்ட புதிர் பற்றித் தீவிரமாகச் சிந்தித்தார். அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

பீர்பால் ஒரு தச்சரை அழைத்தார். நீ மரப்பலகையால் மூடிய கட்டில் ஒன்று தயார் செய். அதிக எடை கூடாது. கட்டிலை உயரத் தூக்கு கீழிருந்து நடுப் பகுதியில் உன் தலையால் அதைத் தாங்கு. உச்சி வேளைக்கு சற்று முன்போ பின்போ வெயில் பளீரென்று சாய்வாக அடிக்கும் நேரத்தில் கட்டிலுடன் அரண்மனைக்குச் செல். ஞாபகம் இருக்கட்டும். பலகைப் பகுதி மேல் நோக்கியும் கட்டிலின் கால்கள் கீழே தொங்குவது போலவும் இருக்க வேண்டும். அக்பர் சக்கரவர்த்தியைக் கட்டாயம் நேரில் பார்த்தாக வேண்டும் என்று சொல். அவரைப் பார்த்து முடிக்கும் வரை நீ கட்டிலை கீழே வைக்கக் கூடாது என்று பீர்பால் விளக்கினார்.

பிறகு பீர்பால் தச்சரிடம் காதோடு ஏதோ இரகசியம் சொன்னார். அக்பரிடம் சொல்வதற்கு முன்னால் வேறு யாரிடமும் நான் சொன்ன இரகசியத்தை வெளியிடாதே என்று எச்சரித்தார்.

கட்டில் தயாரானது. ஒருநாள் நண்பகலுக்குச் சற்றுமுன் கண்கள் கூசும்படி வெயில் பலமாக இருந்தது. பீர்பால் சொன்ன விதமாகவே தச்சர் கட்டிலைத் தூக்கிக்கொண்டு அரண்மனைக்கு வந்து சேர்ந்தார். விசித்திரமான முறையில் அவர் கட்டிலைத் தூக்கி வருவதைப் பார்த்துக் காவலர்கள் குழப்பமடைந்தனர். தச்சர் கட்டிலைக் கீழே வைக்கவும் மறுத்துவிட்டார். சக்கரவர்த்தியைப் பார்த்தாக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார்.

அக்பருக்குச் செய்தி சென்றது. அவர் அரண்மனை வாயிலுக்கு வந்தார். அவர் தச்சரைப்பார்த்து இது என்ன கோமாளித்தனம் எதற்கு இப்படிக் கட்டிலை தூக்கிக்கொண்டு நிற்கிறாய்? இங்கே கட்டில் வாங்கப்போவதாக யார் சொன்னது? என்னைப் பார்த்ததும் மரியாதை காட்டுவதற்காவது கட்டிலைக் கீழே இறக்கிவைக்க வேண்டாமா? என்று அதட்டல் போட்டார்.

ஆலம்பனா இது கோமாளித்தனம் இல்லை. இந்தக்கட்டில் விற்பனைக்கும் இல்லை. அற்பப்பொருளான இதை அரண்மனையில் விற்க யாருக்குத் தான் துணிச்சல் வரும்? சக்கரவர்த்தி அவர்கள் அறிவித்த புதிருக்கு இது தான் விடை என்றார் தச்சர். தமது மீசையைத் திருகியபடியே அக்பர் கேட்டார். என்ன உளறுகிறாய். நான் போட்ட புதிருக்கும் இந்தக்கட்டிலும் என்ன சம்பந்தம்? ஏன் இன்னும் இதைக் கீழே வைக்காமல் பிடித்துக் கொண்டிருக்கிறாய்.

அரசே என்னைத் தங்கள் திருக்கண்களால் நன்றாகப் பாருங்கள். நான் இந்தக் கட்டிலைத் தலைக்குமேல் தாங்கியுள்ளேன். ஆகவே அதன் கால்களின் நீளப்படி என் இடுப்பு வரையிலான மேற்பாதி உடம்பு இருட்டாக நிழலாக உள்ளது. இடுப்பிலிருந்து பாதம்வரை வெளியே தெரிவதால் கீழ்ப்பாதி உடம்பு வெயிலில் பட்டு பளிச்சென்று உள்ளது. உங்கள் நிபந்தனைப்படியே பாதி நிழலும் பாதி வெயிலுமாக அரண்மனைக்கு வந்துள்ளேன். பரிசாக அறிவித்த நூறு தங்கக் காசுகளை இந்த ஏழைகளுக்கு வழங்கவேண்டுகிறேன் என்றார் தச்சர். அக்பர் புன்சிரிப்புடன் முடியாது என்றார்.

தச்சர் திடுக்கிட்டார். கட்டிலைக் கீழே வைத்துவிட்டு கைகட்டி நின்றார். அக்பர் ஏன் இப்படிச் சொன்னார் என்பது புரியாமல் குழப்பமடைந்தார். அக்பர் தச்சரிடம் உனக்கு கூடுதலாக ஐம்பது தங்கக்காசு சேர்த்து நூற்றைம்பது தங்கக்காசு தருகிறேன். ஆனால் உண்மையைச் சொல்... உனக்கு யார் இந்த உபாயம் சொல்லிக்கொடுத்தார்? அந்த ஆள் எங்கே இருக்கிறார்? சொல்ல மறுத்தால் பரிசும் கிடையாது. கீழ்ப்படியாமைக்காக சிறைத் தண்டனை கிடைக்கும் என்றார்.

தச்சர் பயந்துபோய் கைகூப்பி மன்னர் பெருமானே! நான் ஒரு முட்டாளுங்க. என்னால் புதிருக்கு விடை கண்டுபிடிச்சிருக்க முடியாதுன்னு தாங்கள் நினைச்சது சரிதாங்க. கொஞ்ச நாளைக்கு முன்னாடி ஒரு புரோகிதர் ஐயா நாங்க தொழிலாளர்கள் இருக்கிற பகுதியில் குடிவந்தாரு. அவரோ குச்சுவீட்டுக்கு நான்தான் மரவேலையெல்லாம் செஞ்சு குடுத்தேன். அவர் தன்னோட பேரு பல்பீர்னு சொன்னாரு. நான்தான் தண்டோரா செய்தி கேட்டு அவர்கிட்ட சும்மா சொன்னேன்.

அவர் கொஞ்சநேரம் யோசிச்சப்புறம் இந்தக்கட்டில் உபாயம் சொன்னாரு. நீங்க தர்ற பரிசுப் பணத்தை அவர்கிட்ட கொடுத்திவேன். கட்டில் செஞ்ச கூலியை மட்டும் அவர் கிட்டேயிருந்து வாங்கிக்கிறேன் என்றான்.

அக்பர் பல்பீர் என்ற பெயரைக் கேட்டதும் அதை மனதில் திருப்பத் திருப்பச் சொல்லிப்பார்த்தார். பீர்பால் என்று ஒலி மாறிவருவதை உணர்ந்து ஆனந்தப்பட்டார். தச்சருக்கு நூற்றைம்பது தங்கக் காசு பரிசாக அளித்தார். அவருடன் ஓர் அமைச்சரையும் அனுப்பி ராஜ மரியாதையுடன் பீர்பாலைப் பல்லக்கில் அழைத்துவருமாறு கட்டளையிட்டார்.

அக்பரிடமிருந்து பிரிந்தபின் பீர்பாலின் வாழ்க்கையும் சுவையற்றிருந்தது. அக்பர் அழைக்கிறார் என்று தெரிந்ததும் பீர்பால் அரண்மனைக்கு விரைந்தார்.

அவரை எதிர்பார்த்துக் காத்திருந்த அக்பர் அவரைக் கண்டதும் விரைந்து முன்சென்று தழுவிக் கொண்டார். இருவர் கண்களிலும் நீர். அதில் மன அழுக்கெல்லாம் கரைந்து போனது.

அக்பர் சற்றுவருத்தத்துடன் பீர்பால் நீர் கல் நெஞ்சுக்காரர் ஐயா... என் இத்தனை வருட அன்பை மறந்துவிட்டு ஒளிந்து கொண்டுவிட்டீரே.

அப்படியில்லை பிரபு. தங்களைப் பிரிந்து நானும் தவித்துக்கொண்டு தானிருந்தேன். நாம் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருக்கும் அன்பு ஏற்றத்தாழ்வு இல்லாதது. இருபுறமும் சமமாக நிலைத்து நிற்கும் அன்பு அது! என்றார் பீர்பால். அக்பர் அவரை மறுபடியும் அணைத்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உ.த.பாதுகாப்பு மாநாட்டில் தமிழர் பிரச்சினை குறித்து ஆராய்வு

வடக்கு, கிழக்கு தமிழர்கள் போரின் பின்னர் இலங்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்த விடயங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மலேசியா, கோலாலம்பூரில் நடைபெறும் தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் முன்வைத்துள்ளனர்.

இந்த மாநாடு கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சிறிதரன், சுமந்திரன் , அரியநேத்திரன், யோகேஸ்வரன் ஆகியோர் இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து இந்த மாநாட்டில் கலந்துரையாடப்படுகிறது.

இதன்போது இலங்கையில் தமிழர் பிரச்சினை, அரசியல் கைதிகள் பிரச்சினை, வடக்கு, கிழக்கில் காணி சுவீகரிப்பு, பல்கலைக்கழக மாணவர்களின் கைது போன்ற விடயங்கள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினால் மாநாட்டில் முன் வைக்கப்பட்டுள்ளன.

இந்த மாநாட்டில் பிரித்தானியா, இந்தியா, சிங்கப்பூர், கனடா, மியன்மார், ஜப்பான், மொரிசியஸ், புரூணை ஆகிய நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர். (அ-2)

## போதைப்பொருள் விற்பனை சிப்பாய்க்கு விளக்கமறியல்

(கொழும்பு)

சீருடையுடன் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை செய்த இராணுவச் சிப்பாய்க்கு பிணை மறுக்கப்பட்டுள்ளது.

குறித்த இராணுவச் சிப்பாயை எதிர்வரும் 8 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் நீதவான் ருவான்திக்கா மாரபன உத்தரவிட்டுள்ளார். சந்தேக நபர் ரனசேவா இராணுவ முகாமிற்கு அருகாமையில் ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்ததாக பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

20 மில்லி கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப்பொருள் 500 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. குறித்த இராணுவச் சிப்பாய் நீண்டகாலமாக சீருடையில் ஹெரோயின் போதைப்பொருளை மறைத்து வைத்து விற்பனை செய்து வருவதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது. (அ-2)

## பிரித்தானிய தொழிலதிபர் வத்தளையில் மரணம்

பிரித்தானியாவின் தொழிலதிபரு ரொருவர் வத்தளையிலுள்ள தனியார் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.

றிச்சர்ட் வில்கின்ஸன் என்ற 49 வயதுடைய பிரித்தானிய தொழிலதிபரே நேற்று மரணமாகியுள்ளார்.

லண்டனிலிருந்து மாலைதீவுக்கு பயணிக்கும் வழியில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விமானம் தரித்து நின்றபொழுது குறித்த தொழிலதிபருக்கு திடீரென சுகயீனம் ஏற்பட்டுள்ளது. உடனடியாக அவரை வத்தளையிலுள்ள தனியார் மருத்துவமனையின் அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதித்த போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

றாகம வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி மேற்படி நபரின் மரணம் தொடர்பில் ஆராய்ந்து பார்த்ததில் புற்றுநோய் காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளதாகவும் அவரது சடலத்தை லண்டனுக்கு எடுத்துச் செல்ல அனுமதிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (அ-2)

## கவர்ச்சி காட்டிய பெண்கள் கணனிகளை திருடினர்

(கொழும்பு)

எல்.ஈ.டி., எல்.சீ.டி மற்றும் மடிக் கணனிகளை கொள்ளையிட்ட பெண் கும்பலொன்றை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாடு முழுவதிலும் கோடிக்கணக்கான இலத்திரனியல் சாதனங்களை இந்தப் பெண் கும்பல் கொள்ளையிட்டுள்ளது. மிகவும் நூதனமான முறையில் இந்தக் கொள்ளைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

கால்களுக்கு நடுவில் மடிக் கணனிகள் மற்றும் எல்.ஈ.டி.மற்றும் எல்.சீ.டி. தொலைக்காட்சிகள் உள்ளிட்ட இலத்திரனியல் சாதனங்களை மறைத்து கொள்ளையிட்டுள்ளனர்.

கவர்ச்சியாக ஆடையணிந்த பெண்கள் கும்பலொன்று பிரபல இலத்திரனியல் சாதன விற்பனை நிலையங்களுக்கு சென்று ஊழியர்களின் கவனத்தை திசை திருப்பிக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் கும்பலைச் சேர்ந்த பெண்களுக்கு நேர்முகத் தேர்வு நடத்தி பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இக்கும்பலுக்கு முதலில் கையடக்கத் தொலைபேசி போன்ற சிறிய பொருட்களை கால்களின் நடுவில் வைத்து நடக்க பயிற்சி அளிக்கப்படுவதாகவும் பின்னர் பெரிய இலத்திரனியல் சாதனங்களை கால்களின் நடுவில் வைத்து சந்தேகம் ஏற்படாத வகையில் நடக்க பயிற்சி அளிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலும் இந்தக் குப்பல் கொள்ளைச் சம்பங்களில் ஈடுபட்டுள்ளது. 60 இற்கும் மேற்பட்ட மடிக்கணனிகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

மீரிகமவைச் சேர்ந்த பெண்களே இந்தக் கொள்ளைச் சம்பவங்களை மேற்கொண்டுள்ளனர். களவுடன் தொடர்புடைய பெண்களுடன் ஆறு பெண்களும் இரண்டு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-2)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1502-போர்த்துக்கீச நாடுகாண் பயணி பெட்ரோ ஆல்வாரெஸ் கப்ரால் பிரேசில் நாட்டின் ரியோடி ஜனெய்ரோ நகரை அடைந்தான்.

★ 1600-ஸ்கொட்லாந்து ஜூலியன் நாட்காட்டியை பயன்படுத்த ஆரம்பித்தது.

★ 1700-ரஷ்யா ஜூலியன் நாட்காட்டியை பயன்படுத்த ஆரம்பித்தது.

★ 1752-கிரகோரியன் நாட்காட்டியை பிரித்தானியா ஏற்றுக் கொண்டது.

★ 1772-90 ஐரோப்பிய நாடுகளில் பயன்படுத்தக் கூடியதான உலகின் முதலாவது பயணிகள் காசோலை லண்டனில் விற்பனைக்கு வந்தது.

★ 1800-டச்சு கிழக்கிந்தியக் கம்பனி கலைக்கப்பட்டது.

★ 1801-பெரிய பிரித்தானியா மற்றும் அயலர்லாந்துப் பேரரசு இணைந்து ஐக்கிய இராச்சியம் ஆனது.

★ 1804-எயிட்டி பிரெஞ்சு ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது.

★ 1906-பிரெஞ்சு குடியரசு நாள்காட்டி பாவனையிலிருந்து விலக்கப்பட்டது.

★ 1808- ஐக்கிய அமெரிக்காவில் அடிமைகளை இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டது.

★ 1833- ஐக்கிய இராச்சியம் போக்லாந்து தீவுகளின் மீது உரிமை கொண்டாடியது.

★ 1858-இலங்கையில் முதலாவது தந்திச் சேவை கொழும்புக்கும் காலிக்கும் இடையில் ஆரம்பமானது.

★ 1861-போர்ஃபீரியோ டயஸ் மெக்சிக்கோ நகரைக் கைப்பற்றினான்.

★ 1866-யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக பொலிஸ் (Police Force) அமைக்கப்பட்டது.

★ 1867-ஐக்கிய அமெரிக்காவில் ஒஹாயோவின் சின்சினாட்டி நகருக்கும் கென்டக்கியின் கொவிங்டன் நகருக்கும் இடையில் ஜோன் ஏ. ரோப்லிங் தொங்கு பாலம் திறக்கப்பட்டது. இதுவே உலகின் அதி நீளமான தொங்கு பாலமாகும்.

★ 1872-இலங்கையில் ரூபாய் மற்றும் சதம் ஆகிய நாணயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

★ 1872-முதலாவது இந்திய அஞ்சல் (தபால்) சேனீ மலைச் (Mount Cenis) சுரங்கம் ஊடாக சென்றது.

★ 1877-இந்தியாவின் மகாராணியாக விக்டோரியா டில்லியில் அறிவிக்கப்பட்டார்.

★ 1883-இலங்கையின் தமிழர் தாயகம் வடக்கு, கிழக்கு என இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது.

★ 1886-பர்மா விக்டோரியா மகாராணிக்கு அவரது பிறந்தநாள் பரிசாக வழங்கப்பட்டது.

★ 1890-எரித்திரியா இத்தாலிய குடியேற்ற நாடாக ஆக்கப்பட்டது.

★ 1893-ஜப்பானில் கிரகோரியின் நாட்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1896-இலங்கையில் முன்னர் றொபேர்ட்சன் கம்பனியின் பொறுப்பில் இருந்த தொலைபேசி சாதனத்தை இலங்கை அரசு கையேற்றது.

★ 1899- கியூபாவில் ஸ்பானிய ஆளுகை முடிவுற்றது.

★ 1901- பிரித்தானியக் குடியேற்ற நாடுகளான நியூ சவுத் வேல்ஸ் குயின்ஸ்லாந்து, விக்டோரியா, தாஸ்மானியா, மேற்கு அவுஸ்திரேலியா ஆகியன அவுஸ்திரேலிய பொதுநலவாயம் என்ற ஒரே நாடாக இணைந்தன. அதன் முதலாவது பிரதமராக எட்மண்ட் பார்ட்டன் தெரிவு செய்யப்பட்டார்.

★ 1905- டிரான்ஸ்- சைபீரியன் தொடரூந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது.

★ 1906-பிரித்தானிய இந்தியாவில் இந்திய சீர்தர நேரம் அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

★ 1911- வட மண்டலம் தெற்கு அவுஸ்திரேலியாவிலிருந்து பிரிக்கப்பட்டு அவுஸ்திரேலிய நடுவண் அரசின் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது.

★ 1912- சீனக் குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1926-துருக்கி கிரகோரியன் நாட்காட்டிக்கு மாறியது.

★ 1927- மெக்சிக்கோவில் கத்தோலிக்க மதத் தடையை எதிர்த்து மதத் தீவிரவாதிகள் அரசுடன் போர் தொடுத்தனர்.

★ 1927-துருக்கி கிரகோரியின் நாட்காட்டியை அறிமுகப்படுத்தியது.

★ 1935-இத்தாலியக் குடியேற்ற நாடுகளான திரிப்பொலி, சிரெனாய்க்கா ஆகியன சேர்ந்து லிபியா ஆகியன.

★ 1945-பெல்ஜியத்தின் செனோன் நகரில் 30 ஜேர்மனிய போர்க்கைதிகள் ஐக்கிய அமெரிக்கப் படைகளினால் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1947-இரண்டாம் உலகப் போரின் முடிவில் கைப்பற்றப்பட்ட ஜேர்மனியின் பிரித்தானிய மற்றும் ஐக்கிய அமெரிக்கப் பகுதிகள் ஒன்றாக்கப்பட்டன. இது பின்னர் ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு எனப் பெயர் பெற்றது.

★ 1948-பிரித்தானிய தொடரூந்து சேவைகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டன.

★ 1949- ஐ.நா. அறிவுறுத்தலின்படி காஷ்மீரில் நள்ளிரவுக்கு ஒரு நிமிடத்துக்கு முன்னர் போர்நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி பாகிஸ்தானுடனான இந்தியப் போர் முடிவுக்கு வந்தது.

★ 1956- சூடான் நாடு எகிப்து மற்றும் பிரித்தானியா ஆகியவற்றிடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1958-இலங்கையில் வாகன இலக்கத் தகடுகளில் சிங்கள மொழியில் ஸ்ரீ எழுத்து கட்டாயமாக்கப்பட்டது.

★ 1958-ஐரேப்பிய சமூகம் அமைக்கப்பட்டது.

★ 1959-கியூபாவின் ஜனாதிபதி ஃபுல்ஜென்சியோ பட்டீஸ்டா ஃபிடெல் காஸ்ட்ரோவின் படைகளினால் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

★ 1960-கமரூன் பிரான்ஸ் மற்றும் பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1962-மேற்கு சமோவா நியூசிலாந்திடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1971-ஐக்கிய அமெரிக்கத் தொலைக்காட்சிகளில் புகைத்தல் குறித்த விளம்பரங்கள் தடை செய்யப்பட்டன.

★ 1984- புரூணை ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1993-செக்கோசிலவாக்கியா நாடு செக் குடியரசு சிலோவாக் குடியரசு என இரு நாடுகளாகப் பிளவடைந்தன.

★ 1995- உலக வணிக அமைப்பு உருவாக்கம்

★ 1999- யூரோ நாணயம் அறிமுகம்

★ 2008- கொழும்பில் வைத்து ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரன் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

### பிறப்புக்கள்

★ 1943-செம்பியன் செல்வன், ஈழத்து எழுத்தாளர்

★ 1978- பரமஹம்ஸ் நித்யானந்தர், இந்திய ஆன்மீகவாதி

### இறப்பு

★ 1901- சி.வை.தாமோதரம்பிள்ளை தமிழ் பதிப்புத்துறையின் முன்னோடி (பி.1832)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. இலங்கைத் தூதர் பல வரலாற்று உண்மைகளை மறைக்கிறார்


பந்துல ஜெயசேகர

அவுஸ்திரேலிய ஊடகங்களில் ஒன்றான *கான்பெர்ரா ரைம்ஸ்* இற்கு, இராஜதந்திரி *புறாக் ஹைய்* எழுதியுள்ள கட்டுரையிலிருந்து...

இலங்கைத் தூதர் பந்துல ஜெயசேகர இலங்கை ஆட்சியாளர்களால் தமிழ் இளையோர் கடத்தப்படுதல் மற்றும் படுகொலை செய்யப்படுதல் உள்ளடங்கலாக மனித உரிமை மீறல் பதிவுகளை சுட்டிக்காட்டத் தவறி விட்டார்.

இவ்வாறு அவுஸ்திரேலிய ஊடகங்களில் ஒன்றான கான்பெர்ரா ரைம்ஸ் வெளியிட்டுள்ள எதிர்வினையில்-ஓய்வுபெற்ற இராஜதந்திரி புறாக் ஹைய் தெரிவித்துள்ளார்.

டிசெம்பர் 15-16 வெளியாகிய வீக் என்ட் அவுஸ்திரேலின் ஊடகத்தில் அவுஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதர் பந்துல ஜெயசேகர தமிழ் மக்கள் இலங்கையில் தொடர்ந்தும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவது தொடர்பாக பக்கசார்பான விளக்கத்தை மட்டும் வழங்கியிருந்தார்.

"அவுஸ்திரேலியர்கள் மத்தியில் இலங்கையிலிருந்து தஞ்சம் புகுந்துள்ளவர்கள் தொடர்பில் தவறான விளக்கப்பாடு ஒன்று காணப்படுகிறது. அதாவது இது தொடர்பில் தவறான, பொய்யான பரப்புரைகளை மேற்கொள்ளும் தரப்பினர் கூறுவதை அவுஸ்திரேலியர்கள் சிலர் நம்புகின்றனர்" என ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் நிலவிய நிறவெறிக்கொள்கை, கிழக்குத் தீமோரில் இடம்பெற்ற அழிவுகள் போன்றவற்றைப் போலவே இலங்கையில் வாழும் தமிழ் மக்களும் இவ்வாறான கொடுமைகளை சந்திப்பதாக அவுஸ்திரேலியர்கள் தகவல்களைப் பெற்றுக்கொண்டனர்.

இலங்கையில் இடம்பெறும் ஜனாதிபதி ராஜபக்சவின் அதிகார ஆட்சியை எதிர்க்கும் அரசியல் எதிரிகளை, மற்றும் தமிழ்மக்களை சித்திரவதைப்படுத்துதல் தொடர்பான செய்திகள் வெளிவந்தன. இது சில அவுஸ்திரேலியர்களின் மனதில் இலங்கையிலிருந்து தஞ்சம்கோரி அவுஸ்திரோலியாவுக்குள் நுழைந்தவர்கள் மீது அனுதாபத்தை ஏற்படுத்தியது.

இலங்கையின் தேசியக்கொடியில் வாழேந்திய சிங்கம் காணப்படுகிறது. இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பிற்பாடு இலங்கையின் தேசியக் கொடியில் அனைத்து இனங் களையும் குறிக்கின்ற குறியீட்டை இடுவதற்கு பெரும்பான்மை சிங்கள சமூகம் எதிர்ப்பைக் காண்பித்தது. இதற்குப் பதிலாக இலங்கையில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மை இனங்களை பிரதிபலிப்பதற்காக இரண்டுகோடுகள் மட்டும் இடப்பட்டன.

இலங்கையில் உள்நட்டு யுத்தம் வெடித்தபோது தமிழ்க்கள், தமது குறியீடாக புலியை தேர்ந்தெடுத்தனர் சிங்கள இராணுவம் சிங்கமாக சித்தரிக்கப்பட்டது.

இலங்கையை பிளவுபடுத்துவதற்காக தமிழ் மக்களை பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கூறுவதன் மூலம் ஜெயசேகர எம்மை நம்பவைக்க முயல்கிறார்.

இலங்கையில் வாழும் பெரும்பான்மை சிங்கள சமூகம் பிரித்தானியர் இலங்கையை விட்டு வெளியேறிய பின்னர் தமிழ் மக்களுக்கான அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்க மறுத்ததன் காரணமாகவே இலங்கையில் உள்நாட்டு யுத்தம் ஒன்று வெடித்தது என்பதைக் குறிப்பிட ஜெயசேகர மறந்துவிட்டார். சிங்கள ஆட்சியாளர்கள் 1983 இல் கொழும்பில் தமிழ் மக்கள் மீது மிகத் தீவிரமான வெறித்தனமான படுகொலைகளைக் கட்டவிழ்த்துவிட்டபோது தமிழ்மக்கள் சிங்களவர்களை எதிர்க்க ஆரம்பித்தனர்.

இக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான தமிழ்மக்கள் இலங்கையின் வடக்கு நோக்கி இடம் பெயர்ந்தனர். இவர்கள் இலங்கை இராணுவத்திடம் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். சிங்களவர்கள் தமிழ்மக்களை வெறுக்க ஆரம்பித்தனர்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து பிறிதொரு உள்நாட்டுப் போரை ஆரம்பிப்பார்களோ என்ற அச்சம் சிங்களவர்கள் மத்தியில் நிலவுகிறது. சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் உரிமைகளை ஏற்பதை தொடர்ந்தும் மறுத்தால், இவ்வாறான உள்நாட்டு யுத்தம் ஒன்று மீண்டும் இடம்பெறலாம்.

"தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சார்பானவர்கள், அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளுக்குள் உள்நுழைவதன் மூலம் மீண்டும் ஒன்றுசேர விரும்புகிறார்கள். இது நீண்டகாலத்தில் அவுஸ்திரேலிய அரசியற் கொள்கைகளில் செல்வாக்கை செலுத்துவதற்கும் தமது இலக்கை நிறைவேற்றிக் கொள்வதற்கும் இது களமாக அமைகிறது. விடுதலைப் புலிகள் மீண்டும் புத்துணர்ச்சி பெறுவதற்கான தளமாக அவுஸ்திரேலியாவைப் பயன்படுத்துவது முக்கியம் மிக்கதாக உள்ளது" என ஜெயசேகர குறிப்பிட்டிருந்தார். ஆனால், இதன் மூலம் விடுதலைப்புலிகள் எதனை அடைந்துகொள்ளப் போகிறார்கள் என்பதை ஜெயசேகர தெளிவாகக் குறிப்பிடவில்லை.

"கனடாவிற்கான இலங்கையின் தூதரகத்தில் முன்னர் பணியாற்றியவன் என்ற வகையில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான குழுக்கள், கனேடியர்களின் நாளாந்த வாழ்வில் எவ்வாறான குழப்பத்தை விளைவித்தார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். இதேபோன்று இவர்கள் அவுஸ்திரேலிய மண்ணிலும் பயங்கரவாத செயற்பாடுகளை மேற்கொள்ளலாம்" என அவுஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதர் பந்துல ஜெயசேகர குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு சார்பான குழுக்கள் ஆதாயத்தை பெற்றுக் கொள்வதற்காக ஆட்கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துகின்றனர் என பந்துல ஜெயசேகர குறிப்பிட்டிருந்தார். இவ்வாறான விடயங்களை குறிப்பிட்ட ஜெயசேகர, இலங்கை ஆட்சியாளர்களால் தமிழ் இளையோர் கடத்தப்படுதல் மற்றும் படுகொலை செய்யப்படுதல் உள்ளடங்கலான மனித உரிமை மீறல் பதிவுகளை சுட்டிக்காட்டத் தவறிவிட்டார். இலங்கை அரசின் ஊழல் மோசடிகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக செய்திகளை வெளியிட்ட 40 இலங்கை ஊடகவியலாளர்கள் கடந்த பத்து ஆண்டுகளில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் நிலவும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அவுஸ்திரேலிய வெளியுறவுச் செயலகம் மிக உன்னிப்பாக அவதானித்து வருகிறது. இந்தச் சூழலை அவதானித்து, தனது நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கை அகதிகள் தொடர்பில் எவ்வாறான தீர்மானங்களை இயற்றுவது என்பது தொடர்பாக அவுஸ்திரேலிய அரசாங்கம் பேச்சுக்களை நடத்திவருகிறது.

உள்நாட்டுப்போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கை அரசாங்கத்தால் தமிழ்மக்களுக்கெதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டிற்கு இலங்கையின் ராஜபக்ச அரசாங்கம் உரிய பதிலளிக்காவிட்டால் 2013 இல் இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களுக்கான உச்சிமாநாட்டை தான் புறக்கணிக்கப்போவதாக 2012 செப்ரெம்பரில் கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹாபர் அறிவித்திருந்தார்.

அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் பொப்கார் டிசம்பர் 15,16 இல் இலங்கையின் தலைநகரான கொழும்பில் நின்றபோது, கனேடிய செனற்றர் கக்செகல் மற்றும் லண்டனி உள்ள பொதுநலவாய அமைப்புகளின் செயலாளர், இலங்கையின் பிரதம நீதியரசர் சிரானி பண்டார நாயக்காவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பாக அதிருப்திகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

"பொதுநலவாய அமைப்பின் உறுப்பு நாடான இலங்கை தனது உறுப்புரிமை மூலம் இந்த அமைப்பின் அடிப்படைக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளது. இதன்படி நீதித்துறை உள்ளடங்கலாக ஜனநாயகக் கோட்பாடுகளை பகிர்ந்து கொள்ள வேண்டும். ஆனால், இலங்கை கட்டுப்பாட்டுக்கு மாறாக தொடர்ந்தும் மனித உரிமை மீறல் செயற்பாடுகளில் ஈடுபடுவதானது தனது உறுப்புரிமையை இலங்கை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வதில் கேள்வியை எழுப்புகிறது" என பொதுநலவாய அமைப்பின் சட்டவாளர் சங்கம், பொதுநலவாய சட்டக்கல்வி அமைப்பு, பொதுநலவாய நீதிபதிக்ள் சங்கம் போன்றன இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"சிராணி பண்டார நாயக்க பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டு 19 மாதங்களில், இலங்கையின் 43வது பிரதம நீதியரசரான இவருக்கு எதிராக ஆளும் இலங்கை அரசாங்கம் நம்பிக்கையில்லாப்பிரேரணையை முன்வைத்துள்ளது. அதாவது, இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவால், நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட நகல் ஒன்றை சட்டமாக்குவதற்கு, சிரானி பண்டார நாயக்க மறுத்துள்ள நிலையிலேயே இவருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் முறுகல் நிலை ஆரம்பித்தது" என டிசெம்பர்மாத முற்பகுதியில் வெளியான இந்து நாளிதழில் குறிப்பிடப்பட்டிருந்தது.

"நவம்பர்மாத முற்பகுதியில் பிரதம நீதியரசருக்கு எதிராக 117 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது நம்பிக்கையில்லாப் பிரேரணை அறிக்கையை நாடாளுமன்ற சபாநாயகர் சமல் ராஜபக்சவிடம் கையளித்தனர். இதனைத் தொடர்ந்து பிரதம நீதியரசருக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன" என இந்த நாளிதழில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறான பல்வேறு மீறல்கள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்நிலையில், இவையெதனையும் வெளிப்படுத்தாத பந்துல ஜெயசேகர, இலங்கை அரசாங்கத்திற்கு பக்கசார்பான தகவல்களை மட்டும் தனது அறிக்கையில் குறிப்பிடுவதை கவனத்திற் கொள்ளவேண்டும். இந்நிலையில் அவர், தற்போது, எழுதுவதை நிறுத்தி அதற்கப்பாலும் மீண்டும் சிந்திக்கத் தொடங்க வேண்டும்.

இவ்வாறு ஓய்வு பெற்ற இராஜதந்திரி புறாக் ஹைய் எழுதிய கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்புற்றுநோய் சிகிச்சைக்கு வருடாந்தம் 16 மில். ரூபா செலவு

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

வாய்ப்புற்றுநோய்க்கு உள்ளாகியுள்ள ஒருவருக்கு சிகிச்சை அளிக்கவென அரசாங்கம் வருடத்திற்கு 16 மில்லியன் ரூபாவை செலவிடுவதாகச் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். கடுவெல, போமிரிய மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் வாய்ப்புற்றுநோய்க்கு சிகிச்சை பெறுபவர்களில் 80 சதவீதமானோர் புகைப்பிடித்தல் பழக்கம் காரணமாகவே இந்நோய்க்கு உள்ளாகியுள்ளனர்.

வாய்ப்புற்றுநோயின் பாதிப்புக்களைச் சித்திரிக்கக் கூடிய புகைப்படங்கள் ஒவ்வொரு சிகரெட் பெட்டியினதும் வெளிப்பகுதியில் 80 சதவீதம் காட்சிப்படுத்துவதை வலியுறுத்தும் வகையில் விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இக்கட்டளை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரவிருக்கின்றது. இருப்பினும் இவ்வர்த்தமானிக்கு எதிர்ப்புத் தெரிவித்து புகையிலைக் கைத்தொழிலாளர்கள் சிலர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து உள்ளனர்.

இவ்வாறான நிலையில் அமைச்சரின் நடவடிக்கைக்கு ஆதரவாக மேற்படி பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கையெழுத்திட்டு மகஜரொன்றைக் கையளித்தனர்.

இம்மஜரைக் கையேற்ற அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இவ்வர்த்தமானிக்கு எதிராக சிலர் வழக்கு தொடர்ந்துள்ளார்கள். என்றாலும் இவ்வர்த்தமானியில் ஒரு எழுத்தைக்கூட மாற்றுவதற்கு நான் தயாரில்லை. வாய்ப்புற்றுநோய் காரணமாக இந்நாட்டில் தினமும் குறைந்தது இருவராவது உயிரிழக்கின்றனர்.

இந்நோய்க்கு உள்ளாகி இருப்பவர்களுக்கு சிகிச்சை அளிக்கவென வருடா வருடம் பெருந்தொகைப் பணத்தை அரசாங்கம் செலவிட்டு வருகின்றது. ஒரு வருடத்திற்கு குறைந்தது 16 மில்லியன் ரூபா அளவில் செலவிடுகின்றது.

இந்நோய்க்கு உள்ளாகி மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்களில் 80 சதவீதமானோர் புகைப்பிடித்தல் பழக்கம் காரணமாகவே இந்நோய்க்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த நிலைமை தொடர இடமளிக்க முடியாது. புகைப்பிடித்தல் பழக்கத்திலிருந்து அந்நாட்டு மக்களை விடுவிப்பதற்காக நாம் உச்ச அளவு நடவடிக்கைகளை முன்னொடுப்போம் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

## விடைத்தாள் மதிப்பீட்டுக்கு கொடுப்பனவு போதாது

(கொழும்பு)

க.பொ.த (சா/த) பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை அதிகரிக்கும்படி அகில இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது கிடைக்கப் பெறும் கொடுப்பனவு போதுமானதாக இல்லை என அகில இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் விலை ஏற்றத்திற்கு ஏற்ப வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளமையின் காரணமாக இந்த கொடுப்பனவு ஆசிரியர்களுக்கு போதுமானதாக இல்லை என அகில இலங்கை சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

## நாகை மீனவர்கள் மீது மீண்டும் கடற்படை தாக்கு

நாகபட்டினம் மாவட்டத்திலிருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை இலங்கை கடற்படையினர் மீண்டும் தாக்கியுள்ளனர்.

நாகபட்டினம் புதுப்பேட்டையைச் சேர்ந்த 7 மீனவர்கள் இரண்டு படகுகளில் நேற்று முன்தினம் காலை மீன்பிடிக்க சென்ற போது இந்த தாக்குதல் நிகழ்ந்துள்ளது.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது,

கோடியக்கரைக்கு தென்கிழக்கே அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு விரைந்த இலங்கைக்கடற்படையினர் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் 3 மீனவர்கள் காயமடைந்தனர். அத்துடன் மீனவர்கள் பிடித்து வைத்திருந்த 50ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நண்டுகளையும் இலங்கை கடற்படையினர் தம்வசம் எடுத்துச் சென்றுள்ளனர். (அ-2)

## எந்த நேரமும் கூட்டமைப்புடன் பேசுவதற்கு அரசாங்கம் தயார்

### அமைச்சர் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்த தயார் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அமர்வுகளின் மூலமே 13 ஆம் திருத்தச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வர முடியும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை செய்வது குறித்து அரசாங்கம் இன்னமும் தீர்மானிக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு 13 ஆம் திருத்தச்சட்டத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டுமானால் அதற்கு தயார்.

எனினும் அது பாராளுமன்றத் தெரிவுக் குழு அமர்வுகளின் மூலமாக எட்டப்படும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

எந்த நேரத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் எனவும் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் முனைப்பு காட்டவில்லை என்ற குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## போலிக்குற்றச்சாட்டுக்காக பதவி விலக முடியுமா?–ஷிராணி

(கொழும்பு)

சிறிய தவறு இழைத்திருந்தாலும் பதவியை இராஜினாமா செய்திருப்பேன் என பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

போலியான முறையில் தமக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

களனி ரஜமஹா விஹாரையில் நடைபெற்ற மத வழிபாட்டு நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நீதித்துறையை வலுப்படுத்தும் வகையில் போராடி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். இதே வேளை நீதிமன்றத்திற்கும் நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையில் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெல்பொத்த தம்மஜோதி தேரர் தெரிவித்துள்ளார்.

தெற்காசிய பிராந்திய வலயத்தில் ஒரே ஒரு பெண் பிரதம நீதியரசராக கடமையாற்றி வரும் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிராக போலிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## பிரதம நீதியரசருக்கு எதிரான அறிக்கையை நிராகரிக்கிறோம்

### ஐ.தே.க. பொதுச்செயலாளர்

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக் குழு அறிக்கையை முற்று முழுதாக நிராகரிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

குற்றவியல் பிரேரணை தொடர்பிலான நாடாளுமன்ற தெரிவுக்குழு அறிக்கை ஒரு தலைப்பட்சமானது. இந்த அறிக்கை முழுமை பெறவில்லை. இதனால் இந்த அறிக்கையை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

குற்றவியல் பிரேரணை சமர்ப்பிப்பு முதல் நாடாளுமன்ற தெரிவுக்குழு விசாரணை வரையில் சகல நடவடிக்கைகளும் வெளிப்படைத் தன்மையற்ற வகையில் அமைந்துள்ளது. தமது பக்க நியாயங்களை விளக்குவதற்கு அரசாங்கம் பிரதம நீதியரசருக்கு போதியளவு கால அவகாசத்தை வழங்கத் தவறியுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கே நம்பிக்கை கிடையாது. இதன் காரணமாகவே சுயாதீன ஆணைக்குழுவொன்றை நிறுவி அதன் மூலம் ஆராய ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

எனவே, இந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழு அறிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி நிராகரிக்கின்றது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## பாரதி விளையாட்டு கழகத்திற்கு விளையாட்டு மைதானம் இல்லை

பல வசதிகள் கொண்ட விளையாட்டு மைதானம் ஒன்றினை அமைத்து தருமாறு வள்ளுவர்புரம் பாரதி விளையாட்டுக்கழகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்விளையாட்டுக்கழகம் பொது விளையாட்டுமைதானம் இன்றி பல வருடங்களாக பாடசாலை மைதானத்திலேயே விளையாடி வருகின்றது.

பாடசாலையின் வரையறைகளுக்கு உட்பட்ட இவ்விளையாட்டு மைதானத்தையே நாம் பயன்படுத்த வேண்டியுள்ளது.

அத்துடன் பாடசாலை விளையாட்டு போட்டி நாட்களில் விளையாட்டுக்கழகத்தினரால் முற்றாக விளையாட முடியாத நிலை காணப்படுகிறது.

எனவே, தொடர்ந்தும் போட்டிகளில் பங்கேற்பதற்கும் பயிற்சிகளைப் பெறுவதற்கும் போட்டிகளை நடத்துவதற்கும் எமக்கொரு சிறந்த மைதானத்தை பெற்றுத்தரும்படி அரசியல் பிரமுகர்களையும் விளையாட்டுத்துறை அதிகாரிகளையும் பாரதிவிளையாட்டுக்கழகத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (அ-3-260)



மாத்தளை மாவட்டத்தில் சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். இதன்போது பாதிக்கப்பட்ட 120 குடும்பங்களுக்கு ஜனாதிபதி முற்பண நிதி உதவியும் உலருணவுப் பொருட்களையும் வழங்கி வைத்துள்ளதைப் படத்தில் காணலாம்.

## 10 இலட்சமாவது சுற்றுலாப்பயணி

(கொழும்பு)

நாட்டின் 10 இலட்சமாவது வெளிநாட்டு சுற்றுலாப் பயணி இலங்கையை வந்தடைந்தார்.

சீன நாட்டை சேர்ந்த கணவன் மற்றும் மனைவி ஆகியோர் ஸ்ரீலங்கன் விமான சேவை விமானத்தின் ஊடாக சீனாவிலிருந்து நேற்று இரவு 10 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

கணவன் -மனைவி என இருவர் வந்தமையினால் இவர்கள் முறையே 10 இலட்சம் மற்றும் 10 இலட்சத்து ஒன்று என்ற அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குழந்தை இல்லாதது நோய் அல்ல!

**அன்று ஒரு குடும்பத்தில் ஒன்பது, பத்து குழந்தைகள் என்பது சர்வ சாதாரணம்! குறைந்தபட்சம் என்று பார்த்தால் கூட நான்கு குழந்தைகள் இருப்பார்கள். குழந்தையில்லா தம்பதி எங்கோ ஒன்றுதான் இருந்தார்கள்.**

ஆனால், இன்று குழந்தையில்லாக் குறை என்பது தம்பதிகளிடம் மிகவும் அதிகரித்து விட்டது. இதற்கான முக்கிய காரணம் உணவுதான்.

செயற்கை நிறம் சேர்க்கப்பட்ட உணவுகள், செயற்கை மணம் சேர்க்கப்பட்ட உணவுகள், செயற்கை சுவை சேர்க்கப்பட்ட உணவுகள், பதப்படுத்தப்பட்ட உணவுகள் போன்றவை அன்று இல்லை.

களத்து மேட்டிலிருந்து அப்படியே நெல்லும் தானியங்களும் வீட்டுக்கு வந்தன. இயற்கை உரங்களை இயற்கை பூச்சிக் கொல்லிகளைப் போட்டு பயிர் வளர்த்தார்கள். மாடுகள் இயற்கையாக விளைந்த புல்லைச் சாப்பிட்டு பால் தந்தன.

இன்றோ செயற்கை உரங்கள், செயற்கை பூச்சிக் கொல்லிகள், ஓமோன் ஊசி போட்டு பால் தரும் மாடுகள் என்று சாப்பாடே நம் உடலின் நச்சுத்தனமையை அதிகரித்து புதிது புதிதாக நோய்களை உருவாக்குகிறது. இது போதாததற்கு செயற்கை நிறம், மணம், சுவையுடன் கூடிய உணவுகள் வேறு. எத்தனை பாதிப்புக்களைத்தான் தாங்கும் நம் உடம்பு...! அது தாங்க முடியாமல் போவதன் வெளிப்பாடுதான் வயிற்றுப் புண்ணில் ஆரம்பித்து சிறுநீரக கல் வரை! இவை தவிர நீரிழிவு நோய், மாரடைப்பு, இரத்த அழுத்தம் என்று நிரந்தர நோயாளிகள் ஆக்குவதும்... உயிர்க் கொல்லி நோயான புற்று நோயும் இதனால் வருகின்றது.

இதன் ஒரு பகுதிதான் மலட்டுத்தன்மை




யும்! ஆனால், குழந்தைப் பேறின்மை என்பது இந்த உலகத்துக்கு சந்ததிகளை உருவாக்கும் விடயம் என்பதால் இத்தனை சமூக முக்கியத்துவமும் உணர்வுபூர்வமான ஒரு பாதிப்பும் ஏற்படுத்தி விடுகிறது.

இன்றைய நவீன அவசர கால வாழ்க்கை முறையில் செயற்கையாக விளையும் உணவுப் பொருட்களை ஓரளவுக்கு மேல் நம்மால் தவிர்க்க முடியாதுதான். ஆனால், அவ் உணவால் ஏற்படும் இந்த பாதிப்பைத் தவிர்ப்பது? அல்லது அதை சரிப்படுத்திக் கொள்வது எவ்வாறு? என்று உணவுப் பொருளை தேர்ந்தெடுக்கும் முறையிலும் உணவை சமைக்கும் முறையிலும் இந்த பாதிப்பை பெருமளவில் தவிர்க்க முடியும்!

புதியனவாகவும் உடனடியாகவும் அன்றாடம் சமைப்பது என்பதுதான் இதில் முதல்படி முறையே. மூன்று நாட்களுக்கு நான்கு நாட்களுக்கு ஏன்... ஒரு வாரம், பத்து நாட்களுக்கு சமைத்து குளிர்சாதனப்பெட்டியில் வைத்து சாப்பிடுபவர்கள் இன்று பெருகி வருகிறார்கள்.

வீட்டில் குளிர்சாதனப்பெட்டி என்பதே பச்சைக் காய்கறிகள் கெடாமல் இருக்கவும் பழங்கள், கீரைகள், பால் போன்றவை வைக்கவும்



தான். இவைகூட 2 நாட்களுக்கும் மேல் பழுதாகாமல் வைக்காமல் புதிது புதிதாக வாங்கிக் கொள்ளுங்கள். அரைத்த இட்லி மாவு கூட இரண்டு நாட்கள்தான் வைக்காமல் ஒருவாரம் கூடாது! பழையவை நோய்களைத்தான் கொண்டு வரும்!

இஞ்சி, பூண்டு, புளிக் கரைசல் எல்லாம் அவ்வப்போது செய்து கொள்ளுங்கள். உங்கள் ஆரோக்கியத்தில் முக்கியத்துவத்தோடு ஒப்பிட்டால் இஞ்சி பூண்டை அம்மியில் இரண்டுதட்டுதட்ட எவ்வளவு நேரமாகப் போகிறது...?

அதேபோல செயற்கை உணவுப் பொருட்கள், பொடிகள் போன்றவை ஏற்படுத்தும் பாதிப்புகளில் இருந்து தப்பிக்க அவற்றை விலக்கி வைத்திடுங்கள். உதாரணமாக மஞ்சள் தூள் என்பது கிருமி நாசினி, புற்று. நோயைத் தடுக்கும் ஆற்றல் கொண்டதாக இருக்கிறது.

இந்த மஞ்சள் தூள் வீட்டில் அரைத்ததாக இருந்தால் எப்படி நல்ல குணத்துடனும் செயற்கையாக இருந்தால் எப்படி கெடுதல் குணத்துடனும் மாறிப்போகிறது.

உலகில் வேறெந்த மருத்துவத்துக்கும் இல்லாத சிறப்பு சித்த மருத்துவத்திற்கு இருக்கிறது. அது நாம் உண்ணும் உணவே நம் நோய்க்குத் தேவைப்படும் மருந்தும் ஆவதுதான். அரிசி, கம்பு, சோளம், கேழ் வரகு முதலிய தானியங்கள், கடுகு, சீரகம், மிளகு, வெந்தயம், பூண்டு, மஞ்சள், சுக்கு போன்ற கடைச்சரக்குகள், துவரை, உழுந்து, பாசிப்பருப்பு போன்ற பருப்புகள் அனைத்தும் மருந்து.

பாகற்காய், பறங்கிக்காய், அத்திக்காய், முள்ளங்கி, வெண்டை என 33 காய்களும் முருங்கை, பசளை, கொத்துமல்லி போன்ற கீரை வகைகளும் நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய் போன்ற எண்ணெய் வகைகளும் பசுவின் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய்யும் மருந்துதான்.

இன்று பெண்கள் மத்தியில் மிக அதிகமாக பேசப்படும் சினைப் பையிலுள்ள நீர்க்கட்டியைக் கரைக்கச் செய்யும் மிகப் பெரிய ஒரு மருந்து என்ன தெரியுமா?

மிளகு, சீரகம், பூண்டு, கட்டிப்பெருங்காயம் (தூள் வாங்காதீர்கள்) கொத்து மல்லித்தழை, இரண்டு மிளகு அளவிற்கு கொஞ்சம் இஞ்சி போன்றவற்றை அம்மியில் தட்டிப்போட்டு ரசம் வைத்தால் அடுத்த தெருவுக்கே வாசனை வரும்... நம்மில் பலர் வீடுகளில் தினசரி வைக்கும் இந்த ரசத்தை நன்றாக ஊற்றி சாப்பிட்டால் ஓவரியின் நீர்க்கட்டிகள் தன்னால் கரையும்! கருப்பையில் தேங்கியிருக்கும் உதிரக் கட்டிகள் கூட மிளகு ரசம் சாப்பிட்டால் வெளியேறிவிடும்.

கொள்ளு ரசம் சாப்பிட்டால் உடல் பருமன் குறையும். மாதவிடாய் ஒழுங்காகும். சுமார் 10 வருடங்களுக்கு முன்னால் எல்லாம் இந்த நீர்க்கட்டிகள் கிடையாது. இருந்தாலும் யாரோ சிலருக்கு வெளியே தெரியாமல் இருக்கும் அதுவும் நல்ல உணவிலேயே நல்ல உடல் உழைப்பிலேயே கரைந்து போய் விடும்.

இன்று நவீன வாழ்க்கை முறை, உணவு மாற்றம் இப்படி பல சாதாரண குறைகளைக் கூட மிகப் பெரிய குறைகளாக்கி பாதிப்புக்களை ஏற்படுத்தி விட்டிருக்கிறது. அதேபோல் அடிக்கடி சின்ன வெங்காயத்தை முழுமையாக போட்டு பயத்தம் பருப்பு சாம்பார் வைத்து சாப்பிட்டால் ஆண்களுக்கு விந்து உற்பத்தி நன்கு நடக்கும். பெண்களுக்கு வெள்ளை படுதல் கூட நின்று விடும்.

சின்ன வெங்காயத்தை எதில் போட்டாலும் முழுமையாக போட்டு சாப்பிடுங்கள். அப்போது தான்பலன் அதிகம். வெறுமனே நல்லெண்ணெயில் சின்ன வெங்காயத்தை வதக்கி சாப்பிட்டாலும் ஆண்களுக்கு விந்து ஊற்று அதிகமாகும்.

திராட்சை, உலர் திராட்சை பழங்களையும் சமையலில் கறிவேப்பிலை, முருங்கைக் கீரையையும் தாராளமாக சேர்த்துக் கொண்டால் ஈமோகுளோபின் தட்டுப்பாடு தீரும். இன்று



பல பெண்களுக்கு பல்வேறு வகைககளில் உபயோகிக்கும் செயற்கைப் பொருட்களாலும் சத்துக்கள் பற்றாக்குறை யாலும் பெண்மை சுரப்பிகள் சரியாக சுரப்பதில்லை. இதனாலும் மாதவிடாய் பிரச்சினை, கருவுறாமல் போவது, ஆண்மைத்தனம் போன்றவை இருக்கும்.

இப்படிப்பட்டவர்கள் முருங்கைப் பூ, சோயா, வால்நட்ஸ் போன்றவற்றை போதுமான அளவு சேர்த்துக் கொண்டாலே அவை சரியாகச் சுரக்கும். மாதவிடாய் பிரச்சினையும் மலட்டுத் தன்மையும் நீங்கும்!

என்னிடம் மருத்துவத்திற்கு வருபவர்களுக்கு நான் கட்டாயமாக மண் பானையில் சமைக்கச் சொல்கிறேன். காரணம் அதுவும் கூட ஒருவகை மருத்துவமே!

ஆண்களுக்கு விந்து நீர்த்துப் போவதையும் தானாக வெளியேறுவதையும் மண் பானை சமையல் தடுக்கும்.

விந்துவை கெட்டிப்படுத்தி அதன் அளவையும் இது அதிகப்படுத்தித் தரும்! மண்

**டாக்டர் வி.ஜமுனா**

பானை சமையல் பெண்களுக்கு வெள்ளை படுதலை நிறுத்தும். தவிர உடல் சுருக்கம், முகச் சுருக்கம் குறைந்து வயது குறைவான தோற்றம் கிடைக்கும்.

ஒரு உண்மை என்னவென்றால் சரியாக உணவை தேர்ந்தெடுத்து சரியான முறையில் சமைத்து சாப்பிட்டாலும் போதும். ஆண்களுக்கும் சரி பெண்களுக்கும் சரி பல உடல் குறைகள் நீங்கி குழந்தைப் பேறு கிட்டும். இது என் 31 வருட அனுபவத்தில் கண்ட உண்மை.

அதனால் பிஞ்சுக் காய்கறிகள், கீரைகள், உடலுக்கு கெடுதலற்ற பருப்பு, எண்ணெய் வகைகள் சேர்த்து செயற்கைத் தூள்கள் எதுவும் சேர்க்காமல் வீட்டிலேயே தயாரித்த மசாலாப் பொடிகள் கலந்து சமைத்து சுடச்சுட சாப்பிட்டாலே போதும். மாத்திரைகள், மருந்துகள், பரிசோதனைகள் என்று எதுவும் இன்றி பல குறைகள் தானாகவே நீங்கி குழந்தைப்பேறு அமையும்.

# பௌர்ணமி தினங்கள் வர்த்தக விடுமுறையாக அறிவிக்கவில்லை

## பொதுபலசேனா அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டிற்கான நாட்காட்டியில் பௌர்ணமி தினங்கள் வர்த்தக விடுமுறையாக அறிவிக்கப்படவில்லை என பொதுபலசேனா அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

பௌத்த மக்கள் செறிந்து வாழும் இலங்கையில் பௌர்தர்களுக்கு முக்கியமான பௌர்ணமி தினங்கள் இதுவரை காலமும் வர்த்த விடுமுறைகளாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் 2013 ஆம் ஆண்டு அரச நாட்காட்டிகளில் பௌர்ணமி தினங்கள் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்ட போதிலும் வர்த்தக விடுமுறைகளாக அறிவிக்கப்படவில்லை என பொதுபலசேனா அமைப்பு ஊடக அறிக்கை மூலம் குற்றம் சுமத்தியுள்ளது.

எனினும் ஏனைய மதங்களுக்கு முக்கியமான தினங்கள் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. தைப் பொங்கல், ரம்ழான் பண்டிகை, நபிகள் பிறந்த தினம், ஹஜ் பெருநாள், கிறிஸ்மஸ் பண்டிகை போன்றன வர்த்தக விடுமுறைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன என சுட்டிக்காட்டியுள்ளது.

பெரும்பான்மை பௌத்த மக்களின் முக்கிய நாட்களுக்கு வர்த்தக விடுமுறை வழங்காது ஏனைய மதத்தவர்களின் முக்கிய நாட்களுக்கு எவ்வாறு வர்த்தக விடுமுறை வழங்குவது? என பொதுபலசேனா அமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது. (அ-2)

# வெள்ள அனர்த்தத்தினால் தொற்றுநோய்கள் பெருகும்

## சுற்றாடல் பாதுகாப்பு இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் மட்டக்களப்பு கரையோர பிரதேச மக்கள் கடும் சுகாதார பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதாக கிறீன்கோ சுற்றாடல் பாதுகாப்பு இயக்கம் தெரிவித்துள்ளது.

வெள்ள அனர்த்தம் எதிர்கொண்ட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இருந்து இது தெரிய வந்துள்ளது. குறிப்பாக காத்தான்குடியின் ஆற்றங்கரை பிரதேசங்களில் நுளம்புகள் பெருகியுள்ளன என்று அப்பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் உயிர்க்கொல்லிநோய்கள், தொற்று நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாலும் அவ் அமைப்பு எச்சரித்துள்ளது.

எதிர்காலங்களில் இவ்வாறான வெள்ள அனர்த்தங்களை எதிர்கொள்வதற்காக அனர்த்த முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக குறித்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

வெள்ள அனர்த்தத்தினால் தற்போது ஏற்பட்டுள்ள சுகாதார சீர்கேடு மற்றும் நுளம்புப் பெருக்கம் தொடர்பாக பிரதேச செயலாளருக்கும் காத்தான்குடி நகர சபைக்கும் இவ் அமைப்பு அறிவித்துள்ளதோடு நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்த சுகாதார பிரிவினர் அவசரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சுற்றாடல் பாதுகாப்பு இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய அமைப்பு நாடுகள் இலங்கை விடயத்தில் தலையிடக்கூடாது

## தே.ப. தேசிய இயக்கம் தெரிவிப்பு

எமது உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிடும் அதிகாரம் பொதுநலவாய நாடுகள் அமைப்புக்கு கிடையாது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசரின் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் பொதுநலவாய அமைப்பு தலையிட வேண்டுமெனக்கோரும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,எமது நாட்டின் அரசியலமைப்பே இறை யாண்மை கொண்டது. அதற்கமையவே நாம் செயற்பட வேண்டும். எனவே, அரசியல மைப்பை பாதுகாப்போம் என சத்தியப் பிரமாணம் செய்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அதனை மீறமுடியாது. ஆனால், இன்று பிரதம நீதியரசர் ஷிராணி பண் டாரநாயக்க மீது கொண்டு வரப்பட்ட அரசியல் குற்றப் பிரேரணை தொடர்பான தெரிவுக்குழு அறிக்கை தொடர்பில்பிரச்சினை தோன்றியுள்ளது.

அதைவிடுத்து இவ்விடயத்தில் பொதுநலவாய அமைப்பு தலையிடுவதற்கான அதிகாரம் கிடையாது. அதேவேளை இப்பிரச்சினையில் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் சட்டத்தரணிகள் தலையிட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோரியுள்ளனர்.

இது அரசியலமைப்பை மீறிய செயலாகும். எனவே அரசியலமைப்பை மீறிய இப்பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப் படவேண்டும்.

அத்தோடு பிரதம நீதியரசர் வெளியேறியதும் தெரிவுக் குழுவிலிருந்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் வெளியேறினார்கள். இவ்வாறு வெளியேறியமை பாராளு மன்றத்தின் உயர் தன்மையை, கௌரவத்தை அவமதித்த நடவடிக்கையாகும்.

எதிர்க்கட்சி பிரதிநிதிகள் தெரிவுக்குழுவில் தொடர்ந்தும் பங்குபற்றி தமது பக்க கருத்துக்களை தெரிவித்திருக்க வேண்டும். அத்துடன் தமது பக்க நியாயங்களை அறிக்கையாக வெளியிட்டிருக்கலாம்.

அதைவிடுத்து தெரிவுக்குழுவிலிருந்து வெளியேறியமை பாராளுமன்றத்தை அவமதிக்கும் செயலாகும்.எனவே இவ்வாறு செயற்பட்டவர்களுக்கு எதிராக சபாநாயகர் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (அ-2)

# புதிய பாடசாலை ஆரம்பித்தல்

(சித்தன்கேணி)

யா/தாவளை சைவத்தமிழ் வித்தியாலயத்தின் புதிய பாடசாலை ஆரம்ப நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு திருமதி.க.மகிழ்ராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு ஆசியுரையினை சிவன் தேவஸ்தானத்தின் சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள் ஆற்றவுள்ளார்.

புதிய பாடசாலையின் பெயர்ப்பலகையை வலி.மேற்கு பிரதேச செயலர் அ.சோதிநாதன் திரைநீக்கம் செய்யவுள்ளார்.

(அ-9-17)


## காணி, வீடு விற்பனைக்கு

**வீடு** கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தில் நவீன முறையில் அமைந்த சகல வசதிகளுடனும் கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு

**காணி** நவக்கிரி, அச்சுவேலியில் 14 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

**காணி** தலையாழி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**வீடு** சந்நிதி வீதி, அச்சுவேலியில் சகல வசதிகளுடனும் கூடிய மாடிவீடு விற்பனைக்குண்டு.

சகல தொடர்புகளுக்கும்:
ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்
காணி, வீடு வாங்கித் தருவதற்கும் விற்றுக் கொடுப்பதற்குமான நிறுவனம்
26D, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0779994603
(இ)

## சிவபூமி சிறுவர் மனவிருத்தி பாடசாலை, கோண்டாவில். புதிய மாணவர் அனுமதி- 2013

* 5 வயது நிரம்பிய விசேட தேவையுடைய இருபாலாரும் அனுமதிக்கப்படுவர்.
* மாணவர் தொடர்பான மருத்துவக் குறிப்பு அவசியம்
* பாடசாலை அனுமதி தொடர்பாக எவ்வித கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.
* பாடசாலை நாட்களில் சிற்றுண்டி, மதிய உணவு இலவசமாக வழங்கப்படும்.
* நேர்முகப்பரீட்சையின் போது பெற்றோர், மாணவர் கலந்து கொள்ள வேண்டும்.

விண்ணப்ப முடிவு நாள்:- 10.01.2013

அதிபர்,
சிவபூமி பாடசாலை,
கோண்டாவில்.

நிர்வாக சபை,
சிவபூமி,
அறக்கட்டளை.

(1367)

## சிவபூமி முதியோர் இல்லம்
தொல்புரம், சுழிபுரம்.

தேவை
1. கணனி அறிவுடைய நிர்வாக அலுவலர்
2. தாதி உத்தியோகத்தர்
3. முதியோர் பராமரிப்புக்கான உதவியாளர்
4. பாதுகாப்புப் பணியாளர்

மேற்குறித்த பணிகளுக்கு அனுபவமும் ஆற்றலும் தகைமையுமுடையவர்கள் 10.01.2013 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்

ஆறு.திருமுருகன்
தலைவர்
சிவபூமி அறக்கட்டளை
சிவபூமி அலுவலகம்
கோண்டாவில்.

(1366)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>உயரம்: 5'6''<br>கி.பா: 22<br>தொழில்/ தகைமை: தனியார் கம்பனி (கனடா PR)<br>தொ. இல: B -879 | பிறப்பு: 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 1<br>உயரம்: 5'5''<br>கி.பா: 16.25, 4இல் செவ்.<br>தொழில்/ தகைமை: CIMA Part II<br>தொ. இல: G -897 |
| பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>உயரம்: 5'2''<br>கி.பா: 77, 7 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: முகாமையாளர்<br>தொ. இல: B -881 | பிறப்பு: 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 3<br>உயரம்: 5'5''<br>கி.பா: 35, 4 இல் செவ்.<br>தகைமை: BA. பயிற்றப்பட்ட ஆரம்ப கல்வி ஆசிரியை (விவாகரத்தானவர்)<br>எ.பா: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ. இல: G -898 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா: 18.25<br>உயரம்: 5' 11''<br>தொழில்/ தகைமை: (O/L),விவாகரத்துப்பெற்ற பெண். நிரந்தரவதிவிடமுள்ள PR உள்ள பெண்(பிரான்ஸ்)<br>தொ. இல: B -882 | பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம்: 5'2''<br>கி.பா.:29.75, 1இல் செவ்<br>தொழில்/ தகைமை: Technician (நோர்வே PR)<br>தொ. இல: G -899 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>உயரம்: 6'<br>கி.பா: 42, 2 இல் செவ்<br>தொழில்/ தகைமை: விவசாய டிப்ளோமா பட்டதாரி விவசாய போதனாசிரியர்<br>தொ. இல: B -883 | பிறப்பு: 1968 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 5' 7''<br>கி.பா: 6.25<br>தொழில்/ தகைமை: BA. (பட்டதாரி ஆசிரியர்)<br>எ.பா: விவாகரத்து என்றாலும் ஏற்கப்படும் அரசதொழில்,வியாபாரம், தனியார் தொழில்<br>தொ. இல: G -902 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

## Vacancies

எமது நெல்லியடி கிளையில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- Course Counselor - Female
- Customer Relation Officer - Female
- Computer Instuctor - Male / Female
- Assist. Lecturer for Java,Tally - Male / Female
- Hardware Technician - Male

தபால், இமெயில் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்
ASIAN COMPUTER EDUCATION
Kodikamam Road,Nelliyadi.
e-mail : asianedu@dialogsl.net
(சி/1972)

## Vacancies

எமது சாவகச்சேரி கிளையில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- Course Counselor - Female
- Customer Relation Officer - Female
- Computer Instuctor - Male / Female
- Assist. Lecturer for Java,Tally - Male / Female
- Hardware Technician - Male

தபால், இமெயில் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்
ASIAN COMPUTER EDUCATION
Kaddukkani Lane, Chavakachcheri
e-mail : asianedu@dialogsl.net
(சி/1971)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வை.நகர சபை வரவு செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டது

(கரவெட்டி)

வல்வெட்டித்துறை நகர சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் பெரும்பான்மையான வாக்குகளால் நேற்று தோற்கடிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபையின் வரவு செலவுத்திட்டம் நேற்றுக்காலை 10 மணிக்கு நகரசபை மண்டபத்தில் நகரபிதா ந.அனந்தராஜ் தலைமையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது அவ்வரவு செலவுத்திட்டத்தில் அதிகளவான குறைபாடுகள் காணப்படுவதாகவும் இதனாலேயே வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக வாக்குகள் அளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வல்வெட்டித்துறை நகரசபை 9 அங்கத்தவர்களை கொண்டது. இதில் இருவர் நேற்று சமூகமளிக்காத நிலையில் ஆறுபேர் வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராகவும் சபை நகரபிதா ஆதரவாகவும் வாக்களித்தனர்.

இதனால் வரவு செலவுத்திட்டம் அங்கீகரிக்கப்பட்ட போதும் அதிகளவான சபை உறுப்பினர்கள் வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

வல்வெட்டித்துறை நகர சபையில் நீண்டகாலமாக நகர சபை பிதாவுக்கு எதிராக பல ஆர்ப்பாட்டங்கள், குற்றப் பிரேரணைகள் கொண்டு வந்த நிலையில் தற்போது வரவு செலவுத்திட்டமும் தோற்கடிக்கப்பட்டுள் ளது.

நகர சபையின் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கும் கூட்டம் கடந்த டிசெம்பர் மாதம் 14, 18 ஆம் திகதி களில் கூட்டப்பட்ட போதும் உறுப்பினர்கள் கலந்து கொள்ள வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வல்வெட்டித்துறை நகரசபையில் உள்ள குளறுபடிகளால் அந் நகர சபை மக்களே பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-3-24)

# இந்திய படைவீரர்களுக்கு இலங்கையில் பயிற்சி

## கோத்தபாய தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்பு தொடர்பில் இந்திய படையினருக்கு பயிற்சி அளிக்கக் தயார் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய இராணுவத் தளபதியிடமும் இது தொடர்பில் விளக்கியிருந்தேன்.

பயங்கரவாத ஒழிப்பு தொடர்பிலான அனுபவங்களையும் நுட்பங்களையும் பகிர்ந்து கொள்ளத் தயார். இந்திய அரசாங்கம் விரும்பினால் இந்திய படையினருக்கு இந்தப் பயிற்சிகளை வழங்க முடியும்.

இலங்கையிடமிருந்து பயங்கரவாதத் தடுப்புத் தொடர்பில் பயிற்சி பெற்றுக் கொள்வதா என்பதனை இந்தியாவே தீர்மானிக்க வேண்டும்.

ஆண்டுதோறும் இலங்கை படையினர், இந்தியாவில் பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்றுக் கொள்கின்றனர்.

அதேபோன்று இந்திய படை வீரர்களுக்கும் இலங்கையில் பயிற்சிகளை வழங்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பரீட்சை சட்டங்களில் மாற்றம் கொண்டு வரப்படும்

## *பரீட்சை ஆணையாளர் தெரிவிப்பு*

(கொழும்பு)

இலங்கையில் 40 ஆண்டுகளின் பின்னர் பரீட்சை சட்டங்களில் மாற்றம் கொண்டு வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2013 ஆம் ஆண்டில் பரீட்சை தொடர்பான சட்டங்களில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பரீட்சை மோசடிகள் தொடர்பிலான குற்றச் செயல்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பரீட்சை வினாத்தாள்களை கசியவிட்ட அரச அச்சக அதிகாரிகளுக்கு வாழ்நாள் பரீட்சைத் தடை விதிக்கப்பட்டுள் ளது.

மேலும் கடந்த காலங்களில் பரீட்சைகளின் மூலம் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளை இரத்து செய்வது குறித்து சட்டமா அதிபருடன் கலந்தாலோசிக்க உள்ளதாக பரீட்சை ஆணையாளர் புஸ்பகுமார தெரிவித்துள்ளார். (அ-2)

# மக்களின் தெரிவை மதிக்க வேண்டும்

## சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி

(கொழும்பு)

நாட்டின் நலன்கருதி நிறைவேற்று அதிகாரம், நீதித்துறை மற்றும் நாடாளுமன்றம் ஆகியன பொறுப்புடன் செயற்பட வேண்டும் என சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரண பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்து கையில்,

இன்று நாட்டில் பல பிரச்சினைகள் தோன்றியிருப்பதற்கு காரணம் தவறான புரிந்துணர்வுகளே ஆகும். நிறை வேற்று அதிகாரம், நீதித்துறை மற்றும் நாடாளுமன்றம் என்பவற்றை தற்போது மக்கள் வெறுக்கும் நிலையில் உள்ளனர்.

ஒருவரை கீழ் தள்ளி ஒருவர் மேலே செல்ல முடியாது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வகையில் அதிகாரம் உள்ளது. இவற்றின் சுயா தீனத் தன்மை மக்களுக்கானதாக இருக்க வேண்டும். மக்கள் தெரிவு எதுவாக இருந்தாலும் அதனை மதிக்க வேண்டும் என்றார். (அ-2)


# வளமான வாழ்வை நோக்கி!

# புத்தாண்டின் புதிர்

படித்திருந்தும் தொழில் பயிற்சி பெற்றிருந்தும் இன்னும் பன்மொழிகள் தெரிந்திருந்தும் உரிய தொழில் இன்றி பல ஆயிரக்கணக்கானவர்கள் செய்வதறியாது அங்கலாய்ப்போடு இருப்பதனை நாம் அறிவோம். அத்துடன் பல நூற்றுக்கணக்கான நமது உடன் பிறப்புக்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெறுவதற்காக தலைநகரிலுள்ள பிற மொழி பேசக்கூடியவர்களிடமும் ஏன் நம்மவர்களிடமும் கூட பொருளாதார தேவைகளுக்கு மத்தியில் கஷ்டப்பட்டு எடுத்த பணத்தை கொடுத்து, பல மாதங்கள் இன்னும் வருடக்கணக்கில் காத்திருந்து ஏமாந்த கதைகள் ஏராளம் ஏராளம். அதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காய் நமது பிராந்திய மண்ணில் எமது தாய் மொழியில் நம்பிக்கை, நாணயம் மற்றும் வாய்மைக்கு முத்திரையாய் பல ஆண்டுகளாக நூற்றுக்கணக்கானவர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பி அவர்களின் வாழ்வில் வளம் கொழிக்கவைத்த என்றும் மங்காப் புகழோடு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை புயல் வேகத்தில் வழங்கி வரும் Rif-Raa International (Pvt) LTD உங்களை எதிர்கால வாழ்வுக்கு ஒளியூட்ட பல நூற்றுக்கணக்கான வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை உங்கள் காலடிக்கு சுமந்து வந்திருக்கின்றது.

**02.01.2013 தொடக்கம் 05.01 2013 வரை காலை9.00மணி தொடக்கம் மாலை 7.00மணி வரை நேர்காணலும், நேர்முகப்பரீட்சையும் நடைபெறவுள்ளது.**

**எமது இதர சேவைகள்**

**றிப்றா இன்ரநஷனல் பிறைவேற் லிமிரெட்**

**RIFRAA INTERNATIONAL (PVT) LTD**

* அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்
  (Government Approved Manpower Agency)
* அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர் (அரபு, ஆங்கிலம், தமிழ்)
  (Government Approved Translator - Arabic, English & Tamil)
* முன்கூட்டிய ஆசனப்பதிவு, விமானப்பயணச் சீட்டுக்கள். (உடனுக்குடன்)
  (Reservation & Air Ticketing Agency)
* அரச அனுமதிபெற்ற உல்லாசத்துறை முகவர்.
  (Government Approved Travel & Tourism Agency)

**தொடர்புகளுக்கு:**

0774744204 (திரு. சிவசேகரன் சாகீஸ்வரன்)
உங்கள் மண்ணின் மைந்தன் திரு.சிவசேகரன் சாகீஸ்வரன்
வைத்தீஸ்வரன் மெடிக்கல்ஸ்,
யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக,
இல. 462, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

**RIFRAA INTERNATIONAL (PVT) LTD**
(Labour Licence No: 2502)

Main Street Nintavur, Sri Lanka.
Tel & Fax: +94 67 56 77777
Mob: +94 77 1067055, +94 777 046 755
Email: hr@rifraa.com, rifraa@gmil.com
Web: www.rifraa.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையை இழந்துவிடாதீர்கள்: விடிவெள்ளிக்கு சற்று முன்தான் இருட்டு வெகு அதிகமாக இருக்கும்.

*-தாமஸ் புல்லர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## 2013ஆம் ஆண்டின் பிறப்பில் சத்தியம் வெல்ல சபதம் செய்வோம்

2013ஆம் ஆண்டின் பிறப்பு இன்றாகும். உலகெங்கும் இருக்கக் கூடிய நிர்வாகக் கட்டமைப்பின் பிரகாரம் இன்றைய நாளே அனைவருக்கும் புத்தாண்டாக அமையும்.

2013ஆம் ஆண்டில் காலடி வைக்கும் இவ்வேளையில், எங்கள் வாழ்வு எங்கள் எதிர்காலம் பற்றிய சிந்தனைக்கு இடம் கொடுப்பது இன்றியமையாதது.

அந்த வகையில் ஈழத்தமிழினம் பிறக்கின்ற 2013ஆம் ஆண்டில் தன்னிடம் இருக்கக் கூடிய பலவீனங்களை கண்டறிந்து அவற்றுக்கு நிவாரணம் தேடி எங்களை நாங்கள் செப்பனிடு வோம் என்பதை விருது வாக்காகக் கொண்டு அதனை முதற்கண் நிறைவேற்றுவோம்.

எடுத்ததெற்கெல்லாம் எதிர்மாறான கருத்தை கொண்டிராமல் நல்லதை நல்லதெனவும், பிழையை பிழையெனவும் சுட்டிக்காட்டுகின்ற தூயசிந்தனையை எங்களிடம் வளர்த்துக் கொள்வோம்.

எங்கள்மக்கள் பட்ட துன்பங்களிலிருந்து அவர்களை மீட்டெடுக்கும் முயற்சிகளை முன்னெடுப்பதும் கட்டாயமானதாகும்.

இழந்துவிட்டோம் துன்பத்தை அடைந்து விட்டோம் என்பதற்காக துன்பப்பட்ட மக்களை தொடர்ந்தும் துன்பத்திற்குள் வீழ்த்துகின்ற மனச்சாட்சியற்ற செயல்களை செய்யாமல் எங்கள் மக்கள் மகிழ்வோடு வாழ்வதற்கான வழிவகைகளைத் தேடிக்கண்டுகொள்வோம்.

ஏழை மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றப்படாமல் எங்கள் மண் விடிவுபெறாதென்பது நிறுத்திட்டமான உண்மை.

எனவே பிறக்கின்ற 2013ஆம் ஆண்டு ஏழை மக்களின் வாழ்வை உயர்த்துகின்ற ஆண்டாகப் பிரகடனப்படுத்துவோம்.

அன்புக்குரிய தமிழ் அரசியல்வாதிகளே! உங்களிடம் இப்போது நாம் வேண்டுவதெல்லாம் உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசாதீர்கள்.

உங்களைத் தமிழ் மக்கள் மிக உயர்ந்த நம்பிக்கையோடு மதிக்கிறார்கள். ஆனால் உங்களில் பலர் உங்கள் சுயலாபத்திற்காக எப்படியும் தாளம் போடலாம் என்று நினைக்கிறீர்கள். இது இறை நம்பிக்கைக்கும் எங்கள் தமிழ் பண்பாட்டுக்கும் எவ்வகையிலும் பொருத்துடையதன்று.

இந்த உலகம் முழுவதையும் ஆண்ட மகா அலெக்சாண்டர் தன் மரணிப்புக்கு முதல் நாள் தன் படைத்தளபதியை அழைக்கின்றான்.

தளபதியே! நாளை நான் இறந்து விடுவேன். உயிரற்ற என் உடலை மயானத்திற்கு எடுத்துச் செல்லும் போது என் இரண்டு கைகளும் வெளியில் தெரியுமாறு கொண்டு செல்லுங்கள் என்று உத்தரவு விடுகிறான்.

இதனைக் கேட்டு அதிர்ந்து போன தளபதி ஏன்? மன்னா என்று கேட்கிறான். அதற்கு இந்த உலகம் முழுவதையும் ஆட்சிசெய்த மகா அலெக்சாண்டரும் போகும் போது வெறும் கையோடு தான் போகிறான் என்பதை இனிமேலாவது இந்த உலகம் உணர்ந்து கொள்ளட்டும் என்கிறான் மகா அலெக்சாண்டர்.

அன்புக்குரிய தமிழ் அரசியல்வாதிகளே! மகா அலக்சாண்டருக்கும் அதுதான் கதியென்றால் நாம் மட்டும் எம்மாட்டு.

ஆகையால் தமிழ் மக்களுக்காகப் பணி ஆற்றுங்கள். அவர்களின் பிரச்சினையை உடன் இருந்து அறியுங்கள். அவர்களுக்கு உதவுங்கள். அது தமிழ் மக்களின் வாழ்வை வளம்படுத்தும்.

தூயமனத்தோடு, தமிழ் பற்றோடு விசுவாசமாக உங்களை அர்ப்பணியுங்கள். அதுபோதும் 2013இல் எங்கள் வாழ்வு நிச்சயம் உயர்வு பெறும். இது சத்தியம்.

# இனிய வாழ்வு தரும் 2013



இனிக்கும் புத்தாண்டு 2013 ஆயிலிய நட்சத்திரம் கடக இராசியில் பிறக்கிறது. பிறக்கும் புத்தாண்டில் பெருமைகள் சேரவும் சிறப்புடன் வாழ்ந்து செல்வம் குவிக்கவும் இயற்கையின் சீற்றங்கள் எதுவும் இல்லாமல் நலமும் வளமும் நமக்குக் கிடைத்திட நாம் ஆண்டின் தொடக்க நாளிலேயே ஆலயத்திற்குச் சென்று இறைவழிபாட்டை மேற்கொள்வது அவசியமாகும்.

தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாடுவதைப்போல ஆங்கிலப் புத்தாண்டையும் இப்போது எல்லா மக்களும் கொண்டாடத் தொடங்கிவிட்டனர்.

உலா வரும் கிரகங்களில் ஒப்பற்ற மாற்றங்கள் வரும்பொழுது அதை வரவேற்க வேண்டியது நமது கடமையாகும். கீர்த்தி தரும் கிரகங்களை நேர்த்தியுடன் வழிபடுவதோடு அதற்குரிய தெய்வங்களையும் தேர்ந்தெடுத்து வழிபட்டால் தித்திக்கும் விதத்தில் நமது வாழ்க்கை அமையும்.

### சுக்ர பலத்தோடு வரும் வருடம்

அள்ளிக் கொடுக்கும் ஆற்றல் வெள்ளி சுக்ரனுக்கு உண்டு என்பார்கள். யார் யாருக்கு எல்லாம் அது செல்வத்தை வாரி வழங்கப் போகிறது என்பதை இங்குள்ள இராசி பலன் களைப் படித்து நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

இந்த ஆண்டின் கூட்டுத்தொகை 2013 என் பது 2+0+1+3= 6 என்று சுக்ரனின் ஆதிக்கத்திற்குரிய ஆண்டாக வருகிறது.

1-1-2013 என்று எழுதினால் சனியின் ஆதிக்கத்தில் (எட்டு) என்று வருகிறது.

நட்சத்திர அடிப்படையில் ஆயிலியம் என்பது புதனுக்குரிய நட்சத்திரம். எனவே ஐந்து எண் ஆதிக்கமும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.

கிழமை அடிப்படையில் செவ்வாய் என்ற ஒன்பது எண் ஆதிக்கத்திற்குரிய கிழமை வருகிறது.

எனவே ஐந்து, ஆறு, எட்டு, ஒன்பது (5,6,8,9) ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு இந்த ஆண்டு ஒரு பொன்னான ஆண்டாக அமையும். புகழ்கூடும். பொன்னும் பொருளும் போற்றுகிற செல்வாக்கும் இன்னும் பெருகும்.

### புத்தாண்டு பிறப்பு

சுபஸ்ரீ நந்தன வருடம் மார்கழி மாதம் 17ஆம் திகதி (01.01.2013) செவ்வாய்க்கிழமை சதுர்த்தி திதி, ஆயிலிய நட்சத்திரம் கடக இராசியில் புத்தாண்டு பிறக்கின்றது. பிறக்கும் புத்தாண்டை முதல் நாள் திங்கட்கிழமை இரவு 12 மணிக்கே கொண்டாடத் தொடங்கி விடுவார்கள்.

புத்தாண்டின் கிரக நிலைகளை பார்க்கும் பொழுது புதிய திருப்பங்கள் பலவும் தோன்றும் ஆண்டாகவே இருக்கிறது. சந்திரன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கிறார்.

சனி -செவ்வாய் உச்சம் பெற்றிருக்கிறார்கள். சந்திர மங்கள யோகமும் புத ஆதித்ய யோகமும் அமைந்துள்ளது.

குரு, சுக்ரப் பார்வையால் திடீர் மாற்றங்கள் பலவும் வந்து சேரும் விதத்தில் இருப்பதால் ஆலய வழிபாட்டில் அனைவருக்கும் ஆர்வம் கூடும்.

மக்கள் தங்கள் பிரச்சினைகள் தீர அர்ச்சனைகள் செய்வதன் மூலம் சுய ஜாதகத்தை ஆராய்ந்து தெசாபுத்திகளுக்கேற்ற தெய்வ வழிபாடுகளை தேர்ந்தெடுத்து யோக பலம் பெற்ற நாளில் உங்களுக்கு அனுகூலம் தரும் தல ங்களை கண்டறிந்து வழிபாடுகளை மேற்கொண்டால் தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும்.

தொகை வரவு வந்து கொண்டேயிருக்கும். மக்கள் செல்வாக்கு மேலோங்கும், மதிப்பும் மரியாதையும் உயரும் தொழில் வளமும் உயரும்.

### உலா வரும் கிரக நிலைகளில் மாற்றமும் வக்ர இயக்கமும்

குருப்பெயர்ச்சி:- 28.05.2013

**புத்தாண்டு தினத்தின் கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| ← | கேது | வியாழன் (வ) | |
| | 01.01.2013 புத்தாண்டு கிரகநிலை செவ்வாய்- ஆயிலியம் | | சந்திரன் |
| செவ்வாய் | | | |
| சூரியன் புதன் | சுக்ரன் | சந்திரன் இராகு | |

இல் மிதுன இராசியில் குரு சஞ்சரிக்கிறார்.

**குருவக்ர காலம்:-** 01.01.2013 முதல் 06.02.2013 வரை ரிஷப இராசியில் குரு வக்ரம்

மீண்டும் 13.11.2013 முதல் 31.12.2013 வரை மிதுன இராசியில் குரு வக்ரம்.

**சனி வக்ரம்:** 16.02.2013 முதல் 04.07.2013 வரை துலாத்தில் சனி வக்ரம்.

**சனி செவ்வாய் பார்வைக் காலம் :-** இந்த காலத்தில் குறிப்பிட்ட சில இராசிக்காரர்கள் அவசியம் பரிகாரம் செய்து கொள்வது மூலமே அமைதியை காண இயலும்.

02.03.2013 முதல் 10.04.2013 வரை மீனச் செவ்வாய் துலாம் சனி பார்வை. 11.04.2013 முதல் 21.05.2013 வரை மேடச் செவ்வாய் துலாம் சனி 7 ஆம் பார்வை.

சர்ப்ப கிரகத்தின் ஆதிக்கத்தில் உள்ள இராசிகள் மேடம், கடகம், கன்னி, துலாம், மகரம், மீனம். இந்த இராசிக்காரர்கள் சர்ப்பப் பிரதி செய்வது நல்லது.

ஆயிலிய நட்சத்திரத்தில் இந்த ஆண்டு பிறப் பதால் அதற்குரிய காக்கும் கடவுள் விஷ்ணுவை வழிபாடு செய்யலாம். காம தேனுவையும் வழிபடலாம்.

புத்தாண்டு அன்று நம்பிக்கையோடு தும்பிக்கை யானை வழிபட்டு ஆறுமுகப் பெருமாள், உமாமகேஸ்வரர், நந்தீஸ்வரர், நவக்கிரகங்கள், விஷ்ணு, இலட்சுமி, அனுமன், அருள் தரும் சரஸ்வதி, பொருள் தரும் அலைமகள், அனைவரையும் உள்ளத்தில் நினைத்தும் இல்லத்தில் பூஜித்தும் ஆலயத்திற்கு சென்று வழிபட்டும் வந்தால் எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். எல்லா நாட்களும் இனிய நாட்களாக அமையும்.

## ஜனவரி முதலாம் திகதி வழிபாடு

சுக்ரனுக்குரிய எண்ணான ஆறு எண் ஆதிக்கத்தில் பிறக்கும் இந்தப் புத்தாண்டில் சுக்ரனுக்குரிய பாடல் பாடி வழிபாடு செய்வது நல்லது.



அள்ளிக்கொடுத்து ஆதரிக்கின்ற
வெள்ளிச் சுக்ர வேந்தே சரணம்!

மலர் வெண் தாமரை வைரமாம் ரத்னம்
நிலத்தில் தந்தால் நின்னருள் கிட்டும்!

மொச்சை தானியம் முகமலர்ந் தளித்தால்
இச்சைகள் அனைத்தும் இனிதே தீர்ப்பாய்!

திருமண யோகம் சிறப்புடன் வழங்கும்
அருமைச் சுக்ரா அழைத்தோம் வருக!

எல்லா நாட்களும் இனியநாள் ஆக்கி
செல்வச் செழிப்பையும் சிறப்புடன் தருக!

நல்லவர் சேர்க்கையும் நலமும் வளமும்
இன்று முதலே எனக்கு அருள்க!

## ஆண்டின் தொடக்கத்தில் யார் முகத்தில் விழிக்கலாம்?



ஆண்டின் தொடக்க நாளில் இறைவனது திருவுருவப் படங்களின் முகத்தில் விழிப்பது நல்லது. நிலைக்கண்ணாடி, தண்ணீர், ஆலயக் கோபுரம் போன்றவற்றையும் பார்க்கலாம்.

பூஜையறையில் கனி வர்க்கங்களை பரப்பி வைத்து பார்த்தால் கனிவான வாழ்க்கை அமையும்.

வலம்புரிச்சங்கு வைத்திருப்பவர்கள் அதில் காசுகளைப் பரப்பி வைத்து அதன் முகத்தில் விழிக்கலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக கற்பக விநாயகர் திருவுருவப்படத்தை வைத்து வழிபட்டால் கற்பக விருட்சமாய் வளரமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டோனி 7000 ஓட்டங்களைக் கடந்தார்

ஒரு நாள் போட்டிகளில் 7000 ஓட்டங்களைப் பூர்த்தி செய்துள்ளார் இந்திய அணித் தலைவர் எம்.எஸ்.டோனி. பாகிஸ்தானுடன் நடந்த முதலாவது ஒருநாள் போட்டியின்போது இந்த ஓட்டங்களை அவர் கடந்தார். இதே சென்னையில்தான் 2005 ஆம் ஆண்டு தனது முதல் ஒருநாள் போட்டியில் டோனி அறிமுகம் ஆனார். அதே மைதானத்தில் நீண்ட இடைவெளிக்குப் பின் தனது 8 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார் டோனி. அத்துடன் 7000 ஓட்டங்களை எடுத்த 7ஆவது இந்திய வீரர் ஆவார்.

இந்தப் பட்டியலில் முதலிடத்தில் இருப்பவர் சச்சின் டெண்டுல்கர். அவர் சமீபத்தில்தான் ஓய்வு பெற்றார். சச்சின் 18,426 ஓட்டங்களை குவித்துள்ளார். 2 ஆவது இடத்தில் கங்குலி 11,221 ஓட்டங்களும், ராகுல் டிராவிட் 10,768ஓட்டங்களுடனும் 3ஆவது இடத்திலும் உள்ளனர். அதற்கடுத்த இடங்களில் அசாருதின் 9378 ஓட்டங்களுடனும் ஷேவாக் 8242 ஓட்டங்களுடனும் யுவராஜ் சிங் 8053 ஓட்டங்களுடனும் உள்ளனர்.



# டோனிக்கு பெருகும் எதிர்ப்புகள்

கடந்த ஒரு வருடங்களுக்கும் மேலாக, இந்திய கிரிக்கெட் அணியினர் தோல்வியை தழுவி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று சென்னையில் பாகிஸ்தானுக்கு எதிராக நடந்த ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலும் இந்தியா தோல்வியை தழுவியது.

இதனால் அணித்தலைவர் டோனிக்கு எதிரான குரல் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்து இருக்கிறது.

இதுகுறித்து அவர் அளித்த பேட்டியில், என் மீது கூறப்படும் குற்றச்சாட்டுகளை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்த குற்றச்சாட்டுகளை நல்லதாகவே எடுத்து கொள்கிறேன்.

சமீபத்தில், சச்சின் டெண்டுல்கர் சராமாரி குற்றச சாட்டுகளுக்கு ஆளானார், அதை அவர் சகித்துக் கொண்டார்.

ஒவ்வொருவரும் இதுபோன்று சரமாரி குற்றச்சாட்டுகளை பெறுகிறார்கள் என்று நான் நினைக்கவில்லை. எனவே நான் மகிழ்ச்சியாகவே இருக்கிறேன். எனது கவலையெல்லாம், அணியில் உள்ள வீரர்களை பற்றியே இருக்கிறது.

மழை பெய்து ஆடுகளம் மோசமாக இருந்த நிலையில், பாகிஸ்தான் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றது. இதனால் அவர்கள் பந்துவீச்சை தெரிவு செய்தனர். சிறந்த முறையில் அவரகள் பந்து வீசினர். இது துடுப்பாட்டவீரர்களுக்கு சவாலாக அமையவே, அவர்களின் வெற்றிக்கு சாதகமாக அமைந்து விட்டது என்று தெரிவித்துள்ளார்.

# 2 ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார் ஜோகோவிச்

அபுதாபியில் நடந்த டென்னிஸ் போட்டியில் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்றார்.

அபுதாபியில் உலக டென்னிஸ் சாம்பியன்ஷிப் கண்காட்சி தொடர் நடந்தது. இதில் உலகின் முதற்தர வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே உள்ளிட்ட 6 முன்னணி வீரர்கள் பங்கேற்றனர்.

இதன் இறுதி போட்டியில் சேர்பியாவின் ஜோகோவிச், ஸ்பெயினின் நிகோலஸ் அல்மாக்ரோ மோதினர்.

டை-பிரேக்கர் வரை நீடித்த முதல் சுற்றை அல்மாக்ரோ 7-6 என கைப்பற்றினார். பின் எழுச்சி கண்ட ஜோகோவிச், 2ஆவது சுற்றை 6-3 என தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தார்.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவதுசுற்றில் அசத்திய செர்பிய வீரர் 6-4 என வென்றார். இறுதியில் ஜோகோவிச் 6-7, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, தொடர்ந்து இரண்டாவது முறையாக (2011, 12) சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

# 2 ஆவது போட்டியில் ஹோலி அவுட்?




சென்னையில் நடந்த முதல் ஒருநாள் போட்டியில் விராத் கோஹலி காயமடைந்ததால், அவர் 2ஆவது போட்டியில் விளையாடுவது சந்தேகமாகியுள்ளது.

சென்னையில் நேற்று நடந்த இந்தியா, பாகிஸ்தான் இடையிலான முதலாவது ஒரு நாள் போட்டியின்போது விராத் கோஹலி காயமடைந்தார்.

பாகிஸ்தானுக்கெதிரான ஆட்டத்தில் 41ஆவது பந்துபரிமாற்றத்தை விராத் கோஹலி செய்தபோது அவர் சறுக்கி கீழே விழுந்து விட்டார்.

இதில் அவரது வலது முழங்காலில் காயமேற்பட்டது. உடனடியாக அவரை அங்கிருந்து அழைத்துச் சென்றனர். மீண்டும் அவர் பந்து வீசவோ, களத்தெடுப்பில் ஈடுபடவோ வரவில்லை.

இதையடுத்து ஜனவரி 3ஆம் திகதி கொல்கத்தாவில் நடைபெறும் 2ஆவது போட்டியில் அவர் விளையாடுவாரா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது.

அவருக்கு எம்ஆர்ஜ ஸ்கேன் பார்க்கப்பட்டுள்ளது. அதில் மூட்டு சவ்வு கிழிதல் போன்ற எந்தப் பிரச்சினையும் இல்லை என்று தெரியவந்துள்ளதாம்.

லேசான காயம் மட்டுமே ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது. விரைவில் அவர் குணமடைவார என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒருவே[illegible] கோஹலி விளையாடாவிட்டால் [illegible] அவருக்குப் பதில் அஜிங்கியா ரஹ[illegible] அணியில் சேர்க்கப்படுவார்.

# இந்திய அணியின் புதிய பயிற்சியாளர் கங்குலி?



இந்திய அணியின் பயிற்சியாளர் டங்கன் பிளெட்சரின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துடன் முடிவடைகிறது.

அவரது தலைமையில் இந்திய அணி தொடர்ந்து பின்னடைவை சந்தித்து வருகிறது.

இந்நிலையில் அவரது பயிற்சி, பெரும்பாலான வீரர்களுக்கு திருப்தி அளிக்காததால் அவரது பதவிக்காலத்தை பி.சி.சி.ஐ. நீட்டிக்காது என்று தெரிகிறது.

இந்தியாவில் உள்ள முன்னாள் வீரர்களில் ஒருவரை அடுத்த பயிற்சியாளராக தெரிவு செய்ய, குறிப்பாக கங்குலியை நியமிக்க பி.சி.சி.ஐ. ஆலோசனை நடத்தி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இலங்கையின் கிரிக்கெட்டை அன்புடன் அரவணைத்தவர் ரொனி கிரெய்க்

## இரங்கற் செய்தியில் குமார் சங்கக்கார

இலங்கையின் கிரிக்கெட்டை ரொனி கிரெய்க் வேறு யாரும் செய்யாதளவிற்கு முன்னிலைப்படுத்தினார் என இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார். ரொனி கிரெய்க் இற்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவே சங்கக்கார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரும், நேர்முக வர்ணனையாளருமான ரொனி கிரெய்க், தனது 66ஆவது வயதில் நுரையீரல் புற்றுநோயால் மரணமடைந்தார். இலங்கையோடு நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்த ரொனி கிரெய்கின் மரணம் இலங்கையர்களை அதிகம் கவலைக்குள்ளாக்கியுள்ளது.

ரொனி கிரெய்கின் மரணம் கிரிக்கெட் உலகிற்கு மிகப்பெரிய இழப்பு எனத் தெரிவித்த குமார் சங்கக்கார, இது மிகவும் கவலைக்குரியது எனவும், தான் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ரொனி கிரெய்க் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி அறிந்ததும் தான் மிகுந்த அதிர்ச்சியடைந்ததாகத் தெரிவித்த குமார் சங்கக்கார, அவரின் மரணம் மிகப்பெரிய அதிர்ச்சியை வழங்கியதாகத் தெரிவித்தார்.

இலங்கையின் கிரிக்கெட்டை மிகவும் அன்புடன் அரவணைத்துக் கொண்டவராக ரொனி கிரெய்க் அறியப்படுவார் எனத் தெரிவித்த குமார சங்கக்கார,

இலங்கையை முன்னிலைப்படுத்துவதற்கும், இலங்கையை உலகம் முழுவதும் சிறந்த நிலையில் பரப்புரை செய்தவர் என்ற ரீதியில் ரொனி கிரெய்க் முக்கியமானவர் எனத் தெரிவித்தார்.



# பாகிஸ்தான் ஜனாதிபதி இந்தியாவுக்கு...?

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்திய அணியுடன் மோதும் இரண்டாவது போட்டியை கண்டு களிக்க பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி இந்தியாவுக்கு வருகை தர உள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

கொல்கத்தாவில் இடம்பெறும் இந்தப்போட்டி ஜனவரி 3ஆம் திகதி நடைபெற உள்ளது. இந்தப் போட்டியைக் காண பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி, இந்தியாவுக்கு வருவதாக [illegible] றபோதிலும் [illegible] வெளியாகவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு கொண்டாட்டம் ரத்து

இந்தியா வருகை தந்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களுடன் இணைந்து இந்திய வீரர்கள் புத்தாண்டு கொண்டாடும் முடிவு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. கொல்கத்தாவில் எதிரவரும் 3ஆம் திகதி 2ஆவது ஒருநாள் போட்டி நடைபெற உள்ளது. இதையொட்டி இரு அணி வீரர்களும் கொல்கத்தாவில் இணைந்து புத்தாண்டை கொண்டாட திட்டமிடப்பட்டிருந்தனர். ஆனால் இந்திய அணி வீரர்கள், புத்தாண்டு நாளில் தங்களது குடும்பத்தினருடன் நேரத்தை செலவிட விரும்பியதால் தற்போது இந்த கூட்டு கொண்டாட்டம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இதனிடையே கொல்கத்தா கிரிக்கெட் போட்டியைக் காண பிரதமர் மன்மோகன்சிங் திட்டமிட்டிருந்ததாகவும் பாலியல் பலாத்கார சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண் உயிரிழந்ததைத் தொடர்ந்து இதுவும் ரத்து செய்யப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

# இருவேறு விபத்தில் இருவர் படுகாயம்

இரு வெவ்வேறு விபத்துசம்பவங்களில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறுப்பிட்டி மதவடிப் பகுதியில் நேற்று 3 மணியளவில் மோட்டார் சைக்கிள் தடம் புரண்டதில் கரணவாய் மேற்கைச் சேர்ந்த அமுதலிங்கம் சசிகரன் (வயது23) என்பவர் காயமடைந்து யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை தம்பசிட்டி பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில் மோட்டார் சைக்கிள்-துவிச்சக்கரவண்டி விபத்துக்குள்ளாகியதில் பொலிண்டி கந்தசாமி கோவிலடியைச் சேர்ந்த நவரட்ணம் மயூரன் (வயது- 20) என்பவர் காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-24)

## பல்கலை சூழலி...

திடீர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் பிரதான வாயில்,விஞ்ஞான பீட வாயில், மாணவர் விடுதிகளின் வாயில்களில் கடந்த நவம்பர் 28-ம் திகதி முதல் யாழ்ப்பாணம் பொலிஸார் காவற்கூடுகளை அமைத்து காவல் கடமையில் ஈடுபட்டு வந்தனர்.

பொலிஸாரின் பிரசன்னம் மாணவர்களை அச்சுறுத்தும் வகையில் அமைவதாகக் குறிப்பிட்டு கடும் விமர்சனங்களுக்குள்ளாகிய நிலையிலும், ஒருமாத காலமாக நிலைகொண்டிருந்த பொலிஸார் திடீரென விலக்கப்பட்டுள்ளனர். மாணவர்கள் சுதந்திரமான முறையில் அச்சமின்றி கூட்டத்துக்கு வர வேண்டும் என்ற நோக்கிலேயே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அறிய வருகின்றது. (எ-11)

## மாணவர்கள் விடுதலை...

வரையில் தமது பகிஷ்கரிப்பு நடைபெறும் என பல்கலை மாணவர்கள் ஏற்கெனவே அறிவித்திருந்த நிலையில் இதற்கு விரிவுரையாளர்களும் இணக்கம் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் பல்கலை செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பிலான பல்கலை பீடங்களுக்கிடையிலான சந்திப்பொன்று நேற்றை தினம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்படிருந்தது. இதில் மருத்துவபீடம் ஏற்கெனவே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நிலையில் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பிலான கலந்துரையாடல் அதற்கு அவசியமில்லை.

ஏனைய பீடங்களான முகாமைத்துவ பீடம், ...லைப்பீடம் ,விஞ்ஞான பீடம் ஆகியவற்று... செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது ...பான கலந்துரையாடல் அவசியமான... இருந்தது. இது தொடர்பில் தீர்மானம் ...ப்பதற்கு கலைப்பீடத்தினர் நேற்று ஒன்று ...டியிருந்தனர். இதில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்கள் விடுதலை செய்யப்படும் வரை கலைப்பீடத்தின் செயற்பாட்டினை ஆரம்பிப்பது இல்லையென்ற சாராம்சத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது எனத் தெரிய வருகிறது.

இக்கலந்துரையாடலில் மாணவர்கள் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளபோதும் இதற்கு மாணவர்கள் அழைக்கப்பட்டனரா? என்பது குறித்து கூறப்படவில்லை.

எனினும் இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் உறுதிப்படுத்துவதற்கு கலைப் பீடாதிபதியை பலமுறை தொடர்பு கொண்டபோதும் அவர் இல்லையென்றே பதில் வந்துள்ளது.

மேலும் இது தொடர்பில் யாழ் பல்கலை துணை வேந்தரிடம் கேட்டபோது அக்கூட்டம் தொடர்பான அறிக்கை தனக்கு கிடைக்கவில்லை என்றும் அதனை தன்னால் தற்போதைக்கு உறுதிப்படுத்த முடியாதுள்ளது எனவும் கூறினார். (எ -4)

## மனித உரிமை...

கடந்த 2010 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதியன்று யாழ்.மற்றும் வவுனியா தெற்கினைச் சேர்ந்த 70ற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் உத்தரவின் பேரில் மாகாண கல்வியமைச்சினால் 2 வருட ஒப்பந்த அடிப்படையிலான இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது.

இவ்விடமாற்றம் வழங்கப்படும்போது ஒப்பந்தக்காலம் முடிபுறும் போது அவர்கள் தமது சொந்த வலயங்களில் மீண்டும் கடமையாற்ற முடியும் என கூறப்பட்டு அதற்கான எழுத்து மூலமான ஆவணமும் வழங்கப்பட்டிருந்தது.

...ற்போது இவர்களின் இரு வருட ஒப்ப...காலம் இன்றுடன் முடிபுறுகின்ற நிலை... அதற்கான இடமாற்றக் கடிதம் முன்னரே வழங்கப்பட்டிருந்த நிலையிலும் அவ்விடமாற்றம் தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மாகாண கல்வி அமைச்சின் இவ்விட மாற்ற ஒப்பந்த மீறல் நீதிக்கு புறம்பானது என பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கூறியிருந்தனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் இவ்விட மாற்றத்தினை இன்றைய தினம் அமுல்படுத்துமாறு ஆசிரியர்கள் கையெழுத்திடப்பட்ட மகஜர் ஒன்று மாகாண கல்வி பணிப்பாளருக்கு வழங்கப்பட்டு இருந்தது.

எனினும் அங்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் தமக்கு உரிய பதில் வழங்கப்படவில்லை எனவும் தன்னால் எதுவும் செய்யமுடியாது என ஆசிரியர்களிடம் தெரிவித்ததாக சில ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் தமக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிக்கு நீதி பெற்றுத்தரக் கோரி பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இம்முறைப்பாட்டின்போது இலங்கை ஆசிரியர் சங்க உறுப்பினர்களும் உடன் இருந்தனர்.

மேலும் இம்முறைப்பாடானது மாகாண கல்வித் திணைக்களத்திற்கு எதிராகவே அமைந்துள்ளதாகவும் அவ்முறைப்பாட்டினை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். பிராந்தியக் காரியாலயம் ஏற்றுக்கொண்டுள்ளது எனவும் அதன் இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

இம்முறைப்பாடு தொடர்பில் உரியவர்கள் அழைக்கப்பட்டுவிசாரணைகள் மேற்கொள்ளப் படும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். (எ-4)

## கருணாநிதிக்கு...

அ.தி.மு.க. செயற்குழு,பொதுக்குழு கூடியது.

இந்த கூட்டத்தில் அமைச்சர்கள் மற்றும் கட்சியின் மூத்த நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தின் போது இலங்கை தமிழர் விவகாரத்தில் கருணாநிதியை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தமிழர்களின் அழிவிற்கு கருணாநிதி காரணம் எனத் தெரிவிக்கப்படுவது உள்ளிட்ட 25 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (எ-11)

## மருத்துவர் சிவசங்கர்...

காரணம் தெரியவந்துள்ளது.

க.பொ.த. சாதாரணப் பரீட்சைக்கு தோற்றிய குறித்த மாணவி இராணுவத்தில் பரீட்சைக்கு முன்பே இணைந்திருந்தார்.

இவர் பரீட்சை எழுதுவதற்காக தன் வீட்டிற்கு சென்றிருந்தபோது தனது பெற்றோர்களிடம் இராணுவத்தில் தனக்கு இணைவதற்கு சம்மதம் இல்லை எனவும் தான் அங்கு செல்லமாட்டேன் எனக் கூறியுள்ளதோடு, அதிகமாக பயந்தும் உள்ளார்.

இதனால் அச்சிறுமி கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

இதனையடுத்து குறித்த சிறுமியினை மீண்டும் இராணுவத்திற்கு வருமாறு இராணுவத்திடமிருந்து அழைப்பு வந்துள்ளது.

எனினும் அதீதமான பயப்பீதியால் பாதிக்கப்பட்ட குறித்த மாணவியை மீண்டும் இராணுவத்தில் இணைத்தால் உளப்பாதிப்பு ஏற்பட்டு விடலாம் என அஞ்சிய பெற்றோர் வைத்தியர் சிவசங்கரை நாடியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

குறித்த வைத்தியர் மாணவியின் பெற்றோரையும் மாணவியையும் அழைத்துக் கொண்டு கொக்காவில் இராணுவ முகாமிற்கு தன்னையொரு வைத்தியர் என்றும் அடையாளப்படுத்திக் கொள்ளாமல் குறித்த சிறுமியின் உறவினர் என கூறிச் சென்றுள்ளார்.

எனினும் உள்ளே அவரை வைத்தியர் என இனம்கண்டு கொண்ட இராணுவத்தினர், அவரைச் சோதனையிட்டபோது அவரிடம் ஒலிப்பதிவுக்கருவி இருப்பதை அறிந்துள்ளனர்.

அக் குற்றச்சாட்டின் பேரிலேயே வைத்தியர் கைது செய்யப்பட்டார் எனவும் முல்லைத் தீவு நீதிமன்றத்திலும் அக்குற்றச்சாட்டின் பேரிலேயே வழக்குத் தொடரப்பட உள்ளதாகவும் நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-4)




ஜெய்குருதேவ்

இனிய புத்தாண்டின் பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்ஜி அவர்களின்

வாழும்கலை பயிற்சி

மூச்சுப் பயிற்சி, பிரணாயாமம், யோகா, தியானம், சுதர்சன கிரியா

இலவச அறிமுக உரை 02.01.2013

மாலை 5 மணிக்கு

இடம்:- மகேஸ்வரன் மணிமண்டபம் (நல்லூர்)

T.P: 0770474757, 0777607008

(1358)


# ஒளிமயமானதொரு எதிர்கால வரலாறு படைக்கப்படும்!

### வாழ்த்துச் செய்தியில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

பிறக்கின்ற புத்தாண்டின் புது மலர்வில் நாம் செல்லும் பயணம் வெல்லும் என்ற நம்பிக்கை எமது மக்களின் மனங்கள் தோறும் மேலும் வலிமை பெற வேண்டும். அதற்காக நாம் சகல தடைகளையும் கடந்து, இன்னமும் உறுதியுடன் உழைக்க எழுவோம் என்று ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது புத்தாண்டுச் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதுவரை கால மனித குல வரலாறுகள் யாவும் முன்னேறிய சமுதாயங்களையே உருவாக்கித் தந்திருக்கின்றன.

அது போலவே எமது மக்களின் சமகால வரலாற்றின் ஊடாக ஒளிமயமானதொரு எதிர் கால வரலாறு இங்கு படைக்கப்படும் என்பது உறுதி. கடந்துபோன சில ஆண்டுகள் எம் மக்கள் மீது துயரங்களையும, அவலங்களையும் சுமத்தி விட்டு கழிந்து போனது போல்,

இன்று... அமைதி தரும் ஒரு சுழலில் பிறந்திருக்கும் புத்தாண்டை அச்சமின்றி வரவேற்கும் காலம் ஒன்று கனிந்திருக்கிறது என்ற போதிலும் இயற்கை அழிவு தரும் துயரங்கள் எமது மக்களை வாட்டுகின்றன.

வாடிய பயிர்களைக் கண்டு நாமும் வாடியிருக்க முடியாது. எமது மக்களின் வாட்டத்தைப் போக்கவே வரவழைக்கப்பட்டவர்கள் நாம்.

கடந்த கால அழிவுகளிலிருந்து மீண்டெழுந்த எமது மக்களும், தேசமும் இனிவரும் துயரங்கள் எவையாயினும் அவற்றில் இருந்து மீள்வது மிக சுலபமானதே.

அர்த்தமற்ற வெற்றுக் கோஷங்களாலும், நடைமுறைக்கு சாத்தியப்படாத வழிமுறைகளாலும், பிறந்திருக்கும் புத்தாண்டையும் எவரும் இருட்டில் தள்ளிவிட நாம் அனுமதிக்க முடியாது. இவ்வாறு அமைச்சர் மேலும் கூறினார். (எ)

# அச்சமற்ற சூழலில் மக்களின் வாழ்வு தொடர

## அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

### ஈ.பி.டி.பி.அமைப்பாளர் கமல் வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

எமது மக்களின் மீட்சிக்காக இதுவரை நாம் கடந்து வந்த பாதையில் நம்பிக்கை ஒளிவீசும் ஆண்டாகப் பிறக்கப் போகும் புது வருடம் அமைய வேண்டும் என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் தனது புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பிறக்கப்போகும் 2013 புதுவருடத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரை முடிபுறுத்தி நிலையான சமாதானத்தை நிலைநிறுத்த மேற்கொண்ட முயற்சிகளின் ஊடே தம் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக நீடித்த அமைதிக்கான முயற்சிகளை முறியடிக்கும் எத்தனங்களும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

தமிழர் பிரதேசங்களில் இதுவரை அரசு மேற்கொண்டிருக்கும் அபிவிருத்திகளுக்கு எம்மாலான சகல ஒத்துழைப்புகளையும் வழங்கி வந்துள்ளோம்.

தொடரும் புதுவருடத்திலும் எமது மக்களின் நல்வாழ்வுக்கென எம்மாலான அனைத்து ஒத்துழைப்புக்களும் பிறக்கும் புதுவருடத்திலும் இனிதே தொடருமென்பதை இவ்விடத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உண்மைகளுக்கு புறம்பாக இளம் சமூகத்தினரை திசை திருப்பி மீண்டும் உணர்வுகளுக்கு உசுப்பேற்றி மறுக்கப்பட்ட பயங்கரவாதத்தை மேலும் வலுப்பெறுவதாக எழுந்த தவறான கணிப்புகளால் எமது மக்கள் எதிர்கொண்ட இன்னல்கள், கடந்த ஆண்டுடன் முடிபடைந்து புதுவருடத்தில் புதிய நம்பிக்கையுடன் அச்சமின்றி வாழும் சூழலை புதுவருடம் ஏற்படுத்தித் தர வேண்டும்.

தொடரும் கைதுகள் நிறுத்தப்பட்டு கைதான இளைஞர்கள் விடுதலையாகி அச்சமற்ற சூழலில் எமது மக்களின் இயல்பு வாழ்வு இனிதே தொடர வேண்டும் என எமது மக்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## புத்தாண்டு வாழ்த்துச் செய்தி



கடந்த இரண்டரை வருட காலமாக வட பகுதி மாணவர்களுக்கு இரண்டாவது மொழியாக சிங்களத்தையும் ஆங்கிலத்தையும் கற்பித்துக் கொண்டிருக்கும் எமது நிறுவனம் இதுவரை கல்வி கற்றுத் தேறிய எமது இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கும் தற்போது கற்றுக் கொண்டிருக்கும் அறுநூற்று என்பது (680) மாணவர்களுக்கும் மற்றும் வட பகுதி மக்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துச் செய்தியைத் தெரிவித்துக் கொண்டு, இன, மத, மொழி வேறுபாடின்றி நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற கோட்பாட்டை முழுமனதோடு தொடர்ந்தும் கடைப்பிடிப்போம்.

A.T.S.இராமச்சந்திரன்

இந்து பௌத்த கலாசார பேரவை

இல.29, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(சி-1981)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DCM

யாழ்.நகர் (வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)

## A/L - 2015

கலை வர்த்தகம்

ஆரம்பம் - 05.01.2013

சனி - காலை - 9.00

(சி-1982)

## வாடகைக்கு

மானிப்பாய் வில்லியம் மேதர் சேர்ச் முன்பாக சகல வசதிகளைக் கொண்ட வங்கிகள், நிறுவனங்கள் போன்றவற்றுக்கு உகந்த கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0771248269

(சி-1970)

## CITY COLLEGE OF ENGLISH

### ENGLISH EXAMINATIONS

UNIVERSITY OF CAMBRIDGE

Would you like to achieve a certificate in English which is valid for life. If so, the Cambridge ESOL high level English language certificates are the best choice for you.



திருமணம் செய்த இலைத்தரச்சன் அல்லது British பிரஜைகளை திருமணம் செய்ய இருக்கும் அனைவரும் கட்டாயமாக ஆங்கிலத்தில் தேர்ச்சியடைய வேண்டும். UK Border Agency அங்கீகரிக்கும் பாடநெறி Ket (A1, A2) மட்டுமே

**KEY English Test**

A1, A2 U.K Settlement visa வுக்கான பரீட்சையை KET KEY English Test நாளாந்த English பயன் பாட்டிற்கு உகந்த பரீட்சை. பாடங்கள் Reading and Writing Listening & Speaking. பரீட்சையில் 70% புள்ளிகள் பெற்று A2 Certificale 46 - 69 வரையிலா புள்ளிகள பெற்றால் A1 Certificat கிடைக்கும்

| | |
|---|---|
| Date of Exam | 16th March 2013 |
| Application closing date | 20th January 2013 |
| Exam Fees | Rs 6300/= |

**Perliminary English Test**

Leval B1

PET Perliminary English Test இது ஓர் Intermediate Level பரீட்சையாகும் For those who want to use English for work and study நீங்கள் B1 தகுதியைப் பெறத்தவறுமிடத்து A2 Certificate கிடைக்கும்

| | |
|---|---|
| Date of Exam | 16th March 2013 |
| Application closing date | 20th January 2013 |
| Exam Fees | Rs 7500/= |

| | |
|---|---|
| Course Schedule | Mon, Tue, Wed, Thu |
| Duration | 12 weeks |
| Time | Batch 1 10.30 - 12.30 |
| | Batch 2 03.00 - 05.00 pm |

வகுப்புகள்

02.01.2013 ல் ஆரம்பம்

Classes by: Cambridge ESOL Certified Trainer

## IELTS

BRITISH COUNCIL

### For Student Visa and Migration

IELTS பரீட்சைகள் 02.02.2013 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

* பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகள் இப்போது நடைபெறுகின்றன.
* நீங்கள் எங்கு படித்திருந்தாலும் எமது கல்லூரியில் வந்து பரீட்சைக்குப் பதிவு செய்ய முடியும்.
* IELTS பரீட்சைக்குப் பதிவு செய்யும் போது இலவச நூல்களை நாம் தருவோம்.
* கடந்த காலங்களில் எமது கல்லூரியில் கல்வி கற்றவர்கள் Band 8.5 வரை பெற்றிருக்கிறார்கள்
* உடனடியாக வகுப்பில் இணைந்து பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துங்கள்

(சி-1896)

IELTS Registration Center for British Council.

Classes : Sat, Sun 8.30 - 11.30 am

## ESOL Diploma in English

City & Guilds

U K விஸாவுக்கான A1 B1 English Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | |
|---|---|
| Course Schedule | Mon -Tue-Wed-Thu |
| Duration | 2 Months (100 hours) |
| Time | 8.30.10.30 a.m |

02.01.2013

For registration and further details contact

**CITY COLLEGE OF ENGLISH**

(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)

No.143, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.

Tel. 021 2220384 / 077 8803887

## NEC

மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.

A/L 2015

Tamil & English Medium

கணித உயிரியல் பிரிவு

ஆரம்பம் : 02-01-2013 புதன் 3.00மணி

| | |
|---|---|
| CHEMISTRY | PHYSICS |
| வாசு | கருணாநிதி |
| வாகீசன் | எடிசன் |
| Com.MATHS | BIOLOGY |
| விமலநாதன் | சுதா |

## A/L 2015 New Economics College

மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.

கலை, வர்த்தகப் பிரிவு

ஜனவரி 05 சனி 8.00மணி

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.


## அடேல் பாலசிங்கம்...

இயக்கமாக அறிவித்துள்ள பிரித்தானியாவில் புலிகளின் சர்வதேச தலைமையச் செயலகம் அமைந்துள்ளது.

தடை செய்யப்பட்ட இயக்கமொன்றின் உறுப்பினர்கள் எவ்வாறு பகிரங்க ஆர்ப்பாட்டம் நடத்த முடியும்? அரசியல் தலைவர்களுக்கு எதிராக எவ்வாறு போராட்டம் நடத்த முடியும் என பாதுகாப்பு அமைச்சு கேள்வி எழுப்பியுள்ளது.

பிரித்தானியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் நிதி திரட்டுவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2002-ம் ஆண்டு தாய்லாந்தில் நடைபெற்ற சமாதானப் பேச்சு வார்த்தைகளின் போது அடேல் பாலசிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளை பிரதிநிதித்துவம் செய்திருந்தார் என பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (எ 11)


## 2013இல் உதயமாகிறது!

வெற்றித்தேர்வு வளவாளர்களுடன் யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்களின் சிறப்பான வழிகாட்டலில்

### வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப்பிரிவு

தரம் 1 முதல் தரம் 5 வரை

தரம் 1, தரம் 2, தரம் 3 வாரத்தில் 4 தினங்கள் விசேட வழிகாட்டல் வகுப்புக்கள்

தரம் 4, தரம் 5 விசேட புலமைப்பரிசில் வகுப்புக்கள் வாரத்தில் 3 தினங்கள்.

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

02.01.2013 புதன் பி.ப 3.30 மணி

இடம்: நல்லூர் சயன்ஸ் அக்கடமி

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

தொடர்புகளுக்கு: 0775388471, 0773126807

(சி-1963)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

யாழ்.பிரெஞ்சு நட்புறவுக் கழகம்

The Only Official Centre for French Language in Jaffna

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

Alliance Francaise de Paris ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் Alliance Francaise De Jaffna மட்டுமே. சர்வதேச தரம் வாய்ந்த Alliance Francaise De Jaffna இல் France மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.

வகுப்புகள்: சனி, ஞாயிறுகளில்

உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்

(1368)

61, Kachcheri - Nallur Road, Jaffna. Phone : 021 222 8093

E-mail: alliancejaffna@yahoo.com

(முக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டடம்)

## தொழிற் பயிற்சிகள்

**Mobile Phone Repairing**

சகல Mobile Phone களின் Hardware, Software கள் திருத்தும் முறைகள் பயிற்சியளிக்கப்படும்.

| | |
|---|---|
| Batch I | சனி, ஞாயிறு (காலம்: 6 மாதம்) |
| Batch II | கிழமை நாட்கள் (காலம்: 3 மாதம்) |

**Electronics**

சகலஇலத்திரனியல் உபகரணங்கள் (TV, Phone,DVD.Receiver) திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம் : 10 மாதம்

**Air-Conditions**

சகல குளிர்சாதனங்கள் இயங்கும் முறை திருத்துதல் பயிற்சியளிக்கப்படும். காலம் :6 மாதம்

குறிப்பு: பயிற்சிகள் யாவும் முழுநேர செயன்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும் நிறுவனங்களில் தொழில் வாய்ப்பும் பெற்றுக் கொடுக்கப்படும்.

**சிங்கள வகுப்புக்கள்**

சிங்கள மொழியில் எழுத,வாசிக்க, கதைப்பதற்கு ஏற்றவாறு படிப்பிக்கப்படும்.

| | |
|---|---|
| Batch I | (சனி,ஞாயிறு) 4.00 Pm-5.30 Pm (காலம்: 9மாதம்) |
| Batch II | (கிழமை நாட்கள்) 9.00 Am-11 Am (காலம்: 3 மாதம்) |

ஆசிரியர்: K.R.சூரி

(1364)

வகுப்புகள் ஆரம்பம்: 06.01.2013(சனி, ஞாயிறு), 09.01.2013( கிழமை நாட்கள்)

**JAFFNA TECHNICAL INSTITUTE**

மேலதிக விபரங்கள் நேரில்

இல.23, பலாலி வீதி,யாழ்ப்பாணம். T.P.: 071 8561654

கிளை: NEW ASIAN CENTER இல.56/15 B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.:0778249949


## பத்தாண்டு பரிதவிப்பில் - ஆண்டுத் திதி இன்று



அமரர்

தம்பிப்பிள்ளை இராசமணி

உவகையொடு மடிமீது எங்களைத்தான நீ சுமந்து
உலகை இது என்றறியும் அறிவுதனை எமக்குத்தந்து
எவ்வளவு இடர் வரினும் அவ்வளவும் எதிர்வுகொள்ளும்
எவரிடேயும் சளைத்திடாத மதிப்புப் பெறும் துணிவு தந்து
பதமோடெமக் குவந்ததெலாம் பார்த்துப் பார்த்துச் செய்து தந்து
பத்திரமாய் எமைவளர்க்கப் பத்தியங்கள் நீயிருந்தே
அத்தனையும் பெற்றுய்து அவனியிலே வாழவிட்டு
சத்தமின்றி நீயும் சென்று பத்தாண்டு ஆச்சுதம்மா!
கத்தி என்ன கதறி என்ன சுற்றம் நின்று தேற்றி என்ன
பத்திரமாய் பேறடைந்தீர் அங்கிருந்தும் காத்திடம்மா!

-கல்விச் சமூகத்தினர்
The Express Institute
Irupalai Junction, Kopay.

குடும்பத்தினர்
பழைய வீதி, கோப்பாய்.

(சி-1921)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.